திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9   26—8—55 : வெள்ளிக்கிழமை : விலை 3 அணா   மலர் : 2

அதிகாரமின்மையா அறியாமையா?

அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களின் விசித்திரப் போக்கு!

இலங்கை வாழ் திராவிடர்கள் அனுபவித்து வரும் கொடுமைகளை எடுத்துக் காட்டி, அக்கொடுமையிலிருந்து இலங்கை இந்தியர்களை விடுவிக்க பாகிஸ்தான் அகதிகளுக்கு அளித்ததைப்போல புனர்வாழ்வு அளிக்கப்படுமா யென்று சென்னை சட்ட சபையில் 22—8—55-ம் நாள் கூட்டத்தில் உறுப்பினர்கள் பலர் சென்னை அரசியலாரை தக்க விவரங்களுடன் கேட்டனர்• வற்புறுத்தினர்•

ஆனல் உறுப்பினர்களின் இந்த எடுத்துக்காட்டுக்கு சர்க்கார் சார்பில் பதில் அளித்துப் பேசிய நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் 'இலங்கையிலிருந்து இந்தியர்கள் இன்னும் பெருமளவில் வெளியேற்றப்படவில்லை யென்றும் அப்படி ஏதாவது நேர்ந்தால் புனர் வாழ்வளிக்கும் பிரச்னையைப்பற்றி சர்க்கார் பரிசீலிக்கும் என்றும், இப்போது ஒன்றும் அவ்வித நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியமில்லையென்றும்' குறிப்பிட்டிருக்கிருர்,

சட்டசபையில் இப்பிரச்னையைக் குறித்து கேள்வி கேட்ட உறுப்பினர்கள் குருட்டாம் போக்கில் கேட்கவில்லை, அல்லது இதைக் குறித்து கேள்வி கேட்டு விளம்பரம் பெற வேண்டும் என்பதற்காகவும் கேட்கப்பட்டதல்ல, இலங்கை இந்தியர்கள் அனுபவித்துவரும் தொல்லைகளை விளக்கமாக அறிந்தும் அதனை எடுத்துக் காட்டியுமே தங்களின் எண்ணங்களை வற்புறுத்தினர்•

ஆனல் இவ்வளவையும் ஒரே அடியாக மறைத்துவிட்டு இலங்கை இந்தியர்கள், கவலைக்குள்ளாகும் வகையில் ஒன்றும் கொடுமை அனுபவிக்கவில்லை யென்று வாய்ச்சவடால் அடித்திருக்கிருர் நமது நிதி அமைச்சர் சுப்ரமண்யம்!

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே 1954-ம் ஆண்டு ஜனவரி—அக்டோபர் திங்களில் ஏற்பட்ட ஒப்பந்தங்களை இலங்கை சர்க்கார் அமுல் நடத்தும் போக்கு இந்தியப் பேரரசும், இலங்கைவாழ திராவிடர்களும் பெரும் ஏமாற்ற மடைய வேண்டிய நிலையில் தானிருக்கிறது.

மனுச்செய்து கொண்டதில் ஒரு லட்சத்துக்குக் குறைவான பேர்களின் மனுக்களே இவ்வாண்டு ஜூலை முடிய பதிவு செய்யப்பட்டுள்ளன• 1955 ஜனவரி முதல் மே முடிய 146 பேர்கள் மட்டுமே குடியுரிமை பெற முடிந்தது. 11,916 மனுக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன• ஒப்பந்தத்தில் கண்டுள்ளவாறு பார்த்தால் அடுத்த ஜனவரிக்கு முன் இலங்கை அரசாங்கம் எல்லா மனுக்களையும் நிறைவேற்றுமா யென்பது ஐயப்பாட்டிற்குரியதாகும்•

இந்த லட்சணத்தில் இலங்கை வாழ் திராவிடர்களைக் கள்ளத்தோணி யென்றும் நாடோடிகள் என்றும் இகழ்ந்து அவர்களை இலங்கையைவிட்டு வெளியேற்றும் படலம் தலைவிரித்தாடி வருவதை இலங்கையிலுள்ள இந்தியர்கள் அனைவரும் ஒருமித்த குரலெழுப்பிக் கண்டித்து வருவதை உலகமே அறிந்ததாகும்.

எனினும் இந்தியப் பேரரசு—குறிப்பாக இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்களுக்கு இலங்கை வாழ் இந்தியர் பிரச்னை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ அல்லது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாகவோ தெரியவில்லை. இலங்கைவாழ் இந்தியர்களில் பெரும்பாலோர் வடநாட்டவரா யிருந்திருப்பின் இந்திய அரசியலார் துடிதுடித்திருப்பர்! கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி இலங்கை இந்தியர்களின் நலிந்த வாழ்வை நிமிர்த்தி யிருப்பர்•

ஆனல் இலங்கை இந்தியர்களில் பெரும்பாலோர்—ஏன் நூற்றுக்கு தொண்ணூறு பங்கு தென்னுட்டவர்களானதால் நேரு சர்க்காருக்கு இப்பிரச்னை சர்வ சாதாரணமாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் நான் நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு என்பதைப்போல ஏதோ இரண்டு மாதத்திற்கொருமுறை இலங்கை சர்க்காரின் போக்கை கண்டிப்பதைப்போல அறிக்கை விடுவதும் பேசுவதுமாக நடித்து வருகிருர்.

நாம் இவ்வாறு கூறுவதைக் கண்டு நம் நாட்டிலுள்ள சில காங்கிரஸ்காரர்கள் ஆத்திரம் அடையக்கூடும்! எனினும் அவர்கள் அண்மையில் வெளியிடப்பட்ட டெல்லி தேவதைகளின் தாக்கிதைச் சற்று நடுநிலையிலிருந்து எண்ணிப் பார்த்தால் நாம் வெளிப்படையாகக் கூறும் குற்றச்சாட்டுகளை மனதார ஒப்புக்கொள்வர்.

கிழக்கு பாக்கிஸ்தானிலிருந்து வெளியேற்றப்படும் அகதிகளுக்கு இடமளித்து வரவேற்க சென்னை சர்க்காரும் ஆவன செய்ய வேண்டும் என்பதே அந்த உத்திரவாகும்.

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் தென்னுட்டவர்களுக்கு, அவர்கள் சொந்த நாட்டில் புகலிடமளிக்க வழி வகையில்லை. அதுமட்டுமா அதைப் பற்றி விசித்திரமான வியாக்கியானங்களும் பேசப்படுகின்றன! ஆனல் பாக்கிஸ்தானிலிருந்து வரும் அகதிகளை வரவேற்று உபசரிக்க சென்னை சர்க்காரும் இப்போதிருந்தே காத்துக் கிடக்க வேண்டுமாம்!

மேற்கண்ட கோரிக்கைகளைத்தான் சென்னை சட்ட சபை உறுப்பினர்கள் கேட்டனர். இதற்கு சர்க்கார் சார்பில் ஓரளவு நாணயமுடன் பதில் கூற வேண்டுமாயின் இப்பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பு நமக்கில்லை, இதற்கான அதிகாரம் இந்திய சர்க்காரிடம் தானிருக்கிறது. நாங்கள் வேண்டுமானல் உறுப்பினர்களாகிய உங்களின் எண்ணங்களை பண்டிட் நேருஜிக்குத் தெரிவிக்கும் "மாடல்" அஞ்சல் நிலைய வேலையைச் செய்யலாம் — அவ்வளவு தான் நமக்குள்ள சுதந்திரம் என்று கூறி யிருக்க வேண்டும். அவ்விதம் கூறப்பட்டிருந்தால் இந்திய சுதந்திரத்தின் "பெருமையை" எண்ணிப் பூரிப்படைந்திருப்பர் உறுப்பினர்களும்!

ஆனல் சர்க்கார் சார்பில் பதில்கூறிய அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் ஏதோ தங்களிடத்தில் அதிகாரத்தைக் குவித்து வைத்திருப்பதுபோல சவடால் பேச்சு பேசுகிருர்.

இலங்கை இந்தியர்களின் பிரச்னையை கவனிக்க தனி இலாகா ஒன்று அமைக்கவோ அல்லது புனர்வாழ்வு திட்டத்தைக் கொண்டுவரவோ இப்போது ஒன்றும் அவசியமில்லையென்று தலையாட்டிப் பேசுகிருர்!

நம் அமைச்சரின் போக்கினைகாணும் போது சென்னை சர்க்காரின் அதிகாரமின்மையை மறைக்க இவ்வாறு வெட்டிப் பேச்சு பேசுகிருரா அல்லது அறியாமையால் இவ்வாறு உளுத்துப்போன உபதேசம் செய்கிருரா என்பது விளங்கவில்லை.

தேசியத் தோழர்களே, தென்னுடு, வடநாட்டுப் பிடிப்பில் இணைக்கப்பட்டிருப்பதால் வளர்ந்துவரும் அவகேட்டினை இனியாவது நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

—நக்கீரன்

ஆசிரியர் குறிப்பு

திராவிடன் 12—8—55-ம் நாள் இதழில் முதல் பக்கத்தில் 'பெரியாரின் போராட்டமும் தி. மு. கழகமும்' என்னும் தலைப்பில் தோழர் நக்கீரன் வரைந்துள்ள கட்டுரைக்கேற்ப பல தோழர்கள் தங்கள் கருத்தினை விளக்கி மடல் தீட்டியுள்ளனர். அவைகளை நம் திராவிடனில் வெளியிடுவதென்றே எண்ணியிருந்தோம், எனினும் தக்க சமயம் நேரும்போது அவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற காரணத்தால் தற்சமயம் வெளியிட இயலாமைக்கு மன்னிக்குமாறு சம்பந்தப்பட்ட தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்; ஆசிரியர்—திராவிடன்



பம்பாயில் . . . கக்கினுர்?

—விவரம் 4-ம் பக்கம்

முதல் முகலாயப் பேரரசி : சரித்திரச் சித்திரம்

சுல்தானு ரசியா!

கௌதமன்

காலம் : கி. பி. 1236
இடம் : டெல்லி அரண்மனே.
முக்கியஸ்தர்கள் : மன்னன் ஆல்டாமிஷ், பிரதானியர் ஓம்ராகிகள், பிரபுக்கள்,

*

எனக்குப் பின்னுல் இளவரசி ரஸியாவைத்தான் இந்த என் பரந்த சாம்ராஜ்யத்திற்கு 'சுல்தானு'வாக ஆக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

அதெப்படி முடியுமரசே...?

ஏன் முடியாது, என் தோழர்களே!

தங்கள் குமாரர்கள் என்னுவது பிரபு!

குமாரர்கள்! அவர்களுக்கிருக்கிருக்கும் எந்த அனுபவத்தைக் கொண்டு, அவர்களிடம் இந்த விரிந்த நிலப்பரப்பை ஒப்படைக்கச் சொல்கிறீர்கள்? என்ன தெரியுமவர்களுக்கு? எதிரிகளோடு போர்புரியும் வீரமுண்டா? அரசாளும் முறைபற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? வாய்வீச்சுக்கும், வம்பு பேச்சுக்குமே அவர்களுக்கு நேரம் போதவில்லையே!

இருந்தாலும்...! நேர்மையான வாரிசு அவர்கள்தானே அரசே! மேலும், இளவரசி ரஸியா ஒரு பெண்ணல்லவா! இஸ்லாமிய முறைப்படி ஒரு பெண் மணி முடி தரித்து, ஆடவரிடையே உலவுவதும், ஆளுவதும் அனுமதிக்கப்படுமா வென்பது ஒருபுறமிருக்க், இளவரசியாரின் திறமையும், அனுபவமும், அரசாளப் பயன்படுமா? முடியுமா அவர்களால் என்பதுதானரசே ஒரு சிக்கலான பிரச்னே!

பிரச்னேயில் சிக்கலொன்றுமில்லே, எனதருமை நண்பர்களே நீங்கள்தான் அதனேச் சிக்கலுடையதாக்குகிறீர்கள். இளவரசி ரஸியாவைப் பற்றி நீங்கள் யாரும் அறியாதவர்களல்ல. அவளது திறமையும் உங்களுக்குத் தெரியாததல்ல, அவள் வீரத்தை, உங்களால் சந்தேகிக்க முடியாது. அவள் போர்க்கோலம் பூண்டதை. உங்களில் பார்க்காதார் யாருமேயில்லே! அரசியல் அனுபவம் அவளுக்கு இல்லே யென்று உங்களில் யாருமே மணந் துணிந்து சொல்ல முடியாது...! ஏனேனில் நான் முன்பொரு சமயம் குவாலியரின் மீது படை கொண்டு சென்றபோது, இந்நாட்டை ஆண்டது நீங்களல்ல. அவள்தான். அவள்தான் இங்கு கோலேந்தி வீற்றிருந்தாள். அப்போது அவள் ஆட்சியில் தவறென்ன கண்டீர்கள்...?

'அப்போது தங்களின் பிரதிநிதியாக வல்லவோ, அரசாண்டார்கள் இளவரசியார்......!'

'வாரிசாக இருக்கவில்லே என்கிறீரா......? அப்படியாயின் ஒரு பெண்மணியை, பிரதிநிதியாக மட்டுமிருக்க, எப்படி அனுமதித்தீர்கள்? அப்போது மட்டும் இஸ்லாம்' இடங்கொடுத்ததோ மதம் விதிவிலக்களித்ததோ இப்போது மறுக்கிறதோ...?!

[மௌனம்]

'மௌனம் சாதிப்பதில் பயனென்றுமில்லே, என் அன்புப்பிரதானியரே பெரியவர்களும் பிரபுக்களும், மதமார்க்க விற்பன்னர்களுமாக நீங்களிங்கே குழுமியிருந்தும், இந்த முக்கியமான பிரச்சனேயில் இப்படி மௌனம் சாதிப்பதில், என்ன உருவான பலன் கிடைக்க முடியும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்.

தங்கள் கட்டளே அதுவானுல்! நாங்கள் மறுத்துப் பேசுவதற்கே இல்லே பிரபு.

கட்டளேயல்ல இது! ஆல்டாமிஷ் அப்படியாரையும் கட்டளேயால் கவரமாட்டான் அதுவும், இது போன்ற முக்கியப் பிரச்சனேகளில் என்னிடம் நேர்மைக்கு மதிப்பு உண்டென்பதை இவ்வளவு பழகியும், தங்களேப் போன்றவர்களே அறியா விட்டால்—வேறுயார்தான் அறியப் போகிருர்களோ தெரியவில்லே. எப்படியோ போகட்டும் கடமையுணர்ச்சியும் நாட்டுப் பற்றும், ஆளும் திறமையும் போரிடும் வலிமையும், மங்காத பொறுப்புணர்ச்சியும் கொண்டவள் ரஸியா என்ற மறுக்க முடியாத காரணங்களினுல்தான் அவளே நான் சுல்தானுவாக ஆக்கத் தீர்மானித்தேனேயல்லாது அவள் எனதருமை மகளாயிற்றே ஆசைமலர்க் கொடி யாயிற்றே, என்று நான் அவளே அரசியாக்க விரும்பவில்லே பிரச்சனேயைப் பொறுத்தமட்டில், அவள் பெண்ணுகப் பிறந்ததுதான் ஒரு பெருந் தவறே தவிர அவள் திறமையைக் குறைக்கூற எவராலும் முடியாது! நிச்சயமாக முடியாது!!

'தங்கள் விருப்பம் போலாகட்டுமரசே! நாங்களதற்கு இனி தடைசொல்ல மாட்டோம்! வாழ்க மன்னவர்! வாழ்க சுல்தானு-ரஸியா'!!

*

இளவரசி ரஸியாவை, சுல்தானு ரஸியாவாக ஆக்க, இவ்வளவு ஆட்டம் போட வேண்டியிருந்தது மன்னன் ஆல்டாமிஷுக்கு!

மன்னன் ஆல்டாமிஷ், ஓர் அடிமையரசன்! கி. பி. 1211 முதல் 1236 வரையில், டெல்லி சாம்ராஜ்யத்தை அரசான்டவன்! அடிமை யரசனின் வாரிசு! ஆப்கானிய பெருவீரன் கோரி முகம்மதுவின் பிரதிநிதியாக, அவனுல்கொள்ளேயிடப்பட்ட இவ்விந்திய பெருநிலத்தை ஆளும் பொறுப்பேற்றவர்களே அடிமை (Slave Kings of Delhi) அரசர்கள்!, அவர்களின் வழிவந்தவன்தான் ஆல்டாமிஷ்! முதல் அடிமையரசனும், கட்டிடப் பிரியனுமான குத்புதின் (கி. பி. 1205—1210) 'குத்புதீன் உஷி' என்ற பெரியாரின் நினேவாக ஓர் கோபுர மொன்றைச் சமைக்க எண்ணித் துவங்கிய 'குதப்மினூர்' என்னும் விண்ணுயர் கோபுரத்தை அவனிறந்த பிறகும் ஆர்வங் குன்ருமல் எழிலுறக் கட்டி முடித்தவன் ஆல்டாமிஷ்!

தானரசாண்ட 25 ஆண்டுக் காலத்தில் மறத்தற்கரிய சில முக்கிய பணிகளேச் செய்தவன் ஆல்டாமிஷ்! டில்லியின் எல்லேகளே அவன் வளர்த்தது மட்டுமல்ல; தனது அருமைத் தலேவனும் மாமனுருமான குத்புதீன் துவங்கிய நினேவுச் சின்னத்தை, அவன் அங்கு கட்டி முடித்தது மட்டுமல்ல; அதனருகே பல சிங்கார வளேவுகளே இன்றும் எழிலுறக் காட்சி தரும்படி அவன் அமைத்தது மாத்திரமல்ல; ஒருமகத்தான படை யெழுச்சியையே அவன் தவிர்த்திருக்கிருன்.

மங்கோலிய மாவீரன் செங்கிஸ்கான் (கி. பி. 1155—1227) இப்பரந்த உலகின் எல்லேகளேயெல்லாம்அழித்தொழித்து வெற்றிகொள்ள ஆவேசத்தோடுகிளம்பிவந்த நேரத்தில், இவ்விந்திய எல்லேகளேப் பொடியாக்கிக் கொள்ளாமல் தவிர்த்திட்ட பெருமை மன்னன் ஆல்டாமிஷிக்கே உரியது! ஆல்டாமிஷ், மாவீரன் செங்கிஸுடன் பொருது அம்மாதிரிச் செய்யவில்லே. செங்கிஸின் வைரியொருவனுக்கு இந்தியாவிலே—குறிப்பாக டெல்லியிலே—சரண்புக, இடமளிக்காமல், செய்ததின் காரணமாகவே செங்கிஸின் நல்லெண்ணத்திற்குப் பாத்திரமானுன் ஆல்டாமிஷ்! செங்கிஸ், ஆப்கானிஸ்தானத்தின் மீது படையெடுத்தபோது அதன் இளம் மன்னன், அவனுக்குப் பயந்தோடி வந்தான் டெல்லி நோக்கி. ஆனுல் யூகமறிந்த ஆல்டாமிஷ், அவன் தன் சொந்த நாட்டு மன்னர் பரம்பரையினரைச் சார்ந்தவனுயிருந்தும், அவனுக்கு அடைக்கலமளிக்க மறுத்துவிட்டான்! அதோடு டெல்லியையும் செங்கிஸின் கோபத்திற்கு இலக்காகாமல் தப்பவைக்கவும் செய்தான். எதிரியைத் துரத்தும் வேகத்திலே சிந்துநதி வரையிலே வந்து, மீண்டும் திரும்பிவிட்டான் செங்கிஸ் தன் படைகளுடன்! இல்லேயேல் அடிமை வம்சம்—மங்கோலிய வம்சமாக — வெகுகாலத்திற்கு முன்பாகவே மாறிவிட்டிருக்கும்! ஆனுல் ஆல்டாமிஷின் யூகத்தாலும் அனுபவத்தாலும் மட்டுமே வடஇந்தியா தப்பிப் பிழைத்தது!

அதுமட்டுமல்ல; அவன் ஆட்சிக் காலத்தில் வங்காளத்தையும் பீஹாரையும், பணிய வைத்து தனதெல்லேயை அங்கும் பரப்பியிருக்கிருன் ஆல்டாமிஷ்! குவாலியரைத் துளைத்து வெற்றி கண்டதோடு நில்லாமல் வீரம் மிகுந்த மாளவர்களேயும் வென்று அவர்களின் பழம் பெரும் வீரனை விக்கிரமாதித்தியனது பெருஞ் சிலேயையும் தகர்த்தெறிந்து உஜ்ஜெனியிலே வெற்றி விழாவும் கொண்டாடி யிருக்கிருன் அந்த அடிமையரசன்.

எனவே உள்நாட்டு வெற்றிகளிலும், அரசியல் விவகாரங்களிலும் ஈடும் எடுப்புமில்லாத சிறந்தோங்கிய முடிமன்னனுக விளங்கிய ஆல்டாமிஷ், தான், 25 ஆண்டுகளாகக் கட்டிக்காத்த இத்தகைய மகத்தானதோர் சாம்ராஜ்யத்திற்கு பொறுப்பு வாய்ந்த ஒருவரை வாரிசாக நியமிக்க எண்ணியதிலே வியப்பொன்றுமில்லே.

எனவேதான் பிரபுக்களே அழைத்து வாதாடிக் கொண்டிருந்தான்! பிரதானியரை அழைத்து இந்தப் 'பிரகடனத்தை' ஒப்புக் கொள்ளும்படி செய்தான்! அழகுராணி ரஸியாவை டெல்லியின் சிம்மாசனத்திலே கொலு வீற்றிருக்கச் செய்து' முதல் இஸ்லாமியப் பேரரசி அவள்தான் என்ற சிறப்பானதோர் பட்டத்தையும் அந்த வீரமங்கைக்கு வாங்கித்தர வேண்டுமென்பது ஆல்டாமிஷின் பேரவா! அந்த அளவுக்கு ஆளும் திறனுலும் அன்புள்ளத்தாலும் தன் தந்தையைக் கவர்ந்துவிட்டாள் ரஸியா! பட்டத்திற்கு நேர்மையான இளம் பிள்ளேகள் வாரிசாக இருந்தாலும், விசித்திரமாகப் பெண்ணுெருத்தியை பிரகடனம் செய்கின்ற அளவுக்கு ஆல்டாமிஷ் அவள் மீது அன்பு கொண்டிருந்தான்!

அந்த அன்பை ரஸியாவும் உணர்ந்திருந்தாள். எனவேதான் தந்தையிடம் அன்பு பூண்டு அவனுடன் சதா உலாவிக் கொண்டிருப்பதன் மூலம் ஆளும் முறையையும்—மக்களின் மனேநிலேயையும் நல்ல அளவுக்குப் புரிந்து கொண்டிருந்தாள். இந்தமுறை அவளே நன்கு உயர்த்திற்று. இஸ்லாமிய சகாப்தத்திலே படைக்கலம் பூண்டு போர்முறை கற்று களம்பல கண்டு இறுதியில் பேரரசினன் என்றதோர் பட்டம் பெற்று முறையாக நாட்டை ஆளவும் செய்த முதல் பெண்மணி ரஸியாவைத் தவிர வேறு எவருமே கிடையாது.

இளவரசி ரஸியா ஓர் இணேயில்லா பேரழகி! வீரத்தால் பிரானஸின் செல்வ மகள் ஜோனின் வம்சம்! இஸ்லாமியக் கலாசாரத்தையும் ஓரளவு தள்ளி வைத்து தனக்கிருந்த முகத்திரையை கிழித்தெறிந்து எங்கும் எப்போதும் சர்வ வலிமையுடன்—ஆனுல் இளமையைக் காத்துக்கொண்டு உலவியவள். சட்டம், சம்பிரதாயம், நீதி, நேர்மை, இவைகளின் தராதரத்தை நேரில் உணர்ந்து கண்டறிந்தவள். நல்லதோர் திறமைசாலி! மக்களுக்கு நேர்மைப் பாதையைக் காட்ட வேண்டுமென்ற பேரவாவால் உந்தப்பட்டு அதை மனதில் பூண்டே பணிபுரிந்தாள். பிற்காலத்தில் அதே எண்ணங்களால் பின்னியமைக்கப்பட்ட சட்டங்களேயே அமுலுக்குக் கொண்

8-ம் பக்கம்

பஞ்சாபில் மூன்று நாட்கள்

"திருவேடம்"

முதல் நாள் !

எனது மதிப்பிற்குரிய திருமதி சுந்தர்பாய் அம்மாள் அன்புடன் வழங்கிய பாலைப் பருகிக் கொண்டேயிருக்கும்போது மூதறிஞர் சந்த்ராம் அவர்கள் எனது அருகே வந்து அமர்ந்து கிட்டத்தில் எனது முகத்தைப் பார்த்த வண்ணமேயிருந்தார். பாலைப் பருகி முடித்ததும், சந்த்ராமுடன் பேசத் துவங்கினேன்.

அவரது மங்கலானப் பார்வையைக் காண எனக்கு சங்கடமாகவேயிருந்தது. 'கண்ணீர் வடிவு' (Cataract) என்னும் கண் வியாதியால் பீடிக்கப்பட்டு, இன்று கண்ணொளி இழந்தவராக வேதனைப் பட்டுக் கொண்டேயிருக்கிறார். இதைக் கூறும் போது நமது தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் நினைவிற்கு வருகிறார்! அவர் கூடத் தமது கடைசி காலத்தில் கண்ணொளி இழந்து வாட்டமுற்றுப் போனாரன்றோ!

சந்த்ராம் கண்ணொளி இழந்து எப்படிக் கவலைப்படுகிறார் என்பதை அவர் எனக்கு சமீபத்தில் அதாவது 9—8—1955 தேதியிட்டக் கடிதத்திலிருந்தே தெளியலாம். நான் அவருக்கு, இப்போது மீண்டும் புதிதாக வெளிவந்து கொண்டிருக்கிற ஆங்கில வார ஏடாம் 'சண்டே அப்ஸர்வர்' பிரதிகளை வாரா வாரம் தொடர்ந்தாற்போல் மூன்று எனது செலவிலேயே அனுப்பிவைத்தேன். அவர் பொருட்டு எனது கைப் பணம் செலவழிவதைக் கண்டு வருந்தி எழுதியிருக்கும் கடிதத்தைப் பாருங்கள் :

"......உண்மையிலேயே என் பொருட்டுத் தாங்கள் அதிக கவலை எடுத்துக் கொள்கிறீர்கள், இதுவரை மூன்று வார 'சண்டே அப்சர்வர்' இதழ்கள் அனுப்பியிருக்கிறீர். பேப்பர் விலை, தபால்செலவு, எல்லாம் சேர்த்து ரூ. 0—11—3 நீங்கள் இழந்திருக்கிறீர். இது வீண்! ஏனெனில் தங்களுக்கு நனகு தெரியும் எனக்கு கண் பார்வை சுத்தமாகத் தெரியாதென்று நான் படிக்காது மடித்து வைத்துக்கொள்ளத் தாங்கள் ஏன் வெட்டிக்குப் பணத்தை விரயமாக்க வேண்டும்! அதன் ஆசிரியர் திருவாளர் பி. பால சுப்ரமணியம், நான் ஜாத்-பாத்-தோடக் மண்டல் தலைவன் என்கிற முறையில் முன்பெல்லாம் அன்பளிப்பு இதழ் அனுப்புவது வழக்கம், அதைப்போல் இப்போதும் அனுப்புவார் என எண்ணுகிறேன். எனவே உமது பணத்தை வீண் செலவு செய்யாதீர்" —என்று தீர்த்துக் கூறிவிட்டார்.

நிற்க. எனது முதல் பேச்சாக அவரது கண் வியாதியைப்பற்றி விசாரித்தேன், அப்போது அவருக்கு அரைப் பார்வையாகிலும் இருந்தது. தற்போது அதுகூட இல்லாமல் தத்தளிக்கிறார்!

அவருடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே என் பெட்டியைத் திறந்தேன், அதில் அடக்கி வைத்திருந்த பைல்கள், 'விடுதலை' இதழ்கள், 'மாலை மணி' முதல் இதழ் (10—8—49) 'பெரியார் பெர்லின் பயணம்' பம்பாயிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'போரம்' (Forum) என்ற ஆங்கில வார இதழ்கள், டில்லியிலிருந்து வெளிவரும் 'கேரவான்' (Caravan) இதழ், சென்னை 'ஸ்வதந்தரா' (Swatantra) இதழ்கள், மற்ற எனது கைக்குறிப்பேடுகள், போட்டோ ஆல்பம், 'ரிவோல்ட்' (Revolt) பழைய வால்யூம் (திரு, ராமனுதனிடமிருந்து பெற்றது) ஆகியவைகளை எடுத்துவெளியே வைத்தேன்.

இவையெல்லாம் என்ன என்ன என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

இந்தாருங்கள் இதுதான் எங்கள் நாட்டு ஒப்பற்றத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியின் உருவப் படம்! இவரால்தான் நான் இன்று தங்களைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. எனவே இதை எனது அன்பு காணிக்கையாகவும், ஞாபகார்த்தப் பொருளாகவும் அருள் கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள் என நீட்டினேன். இன்முகங் காட்டி வாங்கிப் பார்த்தார். பெரியாரைப்பற்றிய பழைய நினைவுகளையெல்லாம் பேச முற்பட்டார். பரவசத்துடன் பேசினார்.

இதற்குள் அந்தப் படத்தை வாங்கி ஒன்றரை அடிக்கு ஒரு அடி கொண்ட பெரிய படமாக இருக்கிறதே! அழுத்தமாக சட்ட அமைப்பு வேலை நடைபெற்றிருக்கிறதே! இரண்டு கண்ணாடிகளுக்கு இடையில் படத்தை வைத்து 'பிரேம்' போட்டு பின்னாடி துத்தநாகத் தகடு அடித்திருக்கிறதே! ஆங்!...பெரியார்! பெரியார்!! தொண்டு கிழவராக இருக்கிறாரே! வயது எழுபத்தைந்துக்கு மேலிருக்குமே! அழகான பார்வை! ஆனால் அதில் ரோஷம் வீசுகிறது! திண்டில் சாய்ந்து, கைத்தடி பக்கத்தில் வைத்து, உட்கார்ந்திருக்கிறத் தோற்றமே தோற்றம்! என்றெல்லாம் விமரிசனம் பண்ணித் தீர்த்தார் பாட்டி சுந்தர்பாய் அம்மாள்—சந்த்ராம் மனைவி.

அதன் பிறகு 'காரவான்' பத்திரிகையை எடுத்தேன். அதில் அப்போது கே. ஜே ஜாக்கப் என்பார் பெரியாரைப் பற்றியும், அறிஞர் அண்ணாவைப் பற்றியும் அவர்களது உருவப் படங்களுடன் அழகான கட்டுரை ஒன்று தீட்டியிருந்தார். அதிலிருந்த அண்ணா படத்தைக் காட்டி இவர்தான் அறிஞர் அண்ணா என்றேன் Yes! yes! I know him! ஆமாம்! ஆமாம்! அவரையும் பெரியாருடன் பார்த்திருக்கிறேன் என்றார். Why does he want to go away from Periyar's Camp? பெரியாரைவிட்டு ஏன் பிரிகிறார் என்றும் கேட்டார். அதற்குப் பதிலாக 'மாலைமணி' 10—8—49-ல் கண்ட 'பெரியார் பெர்லின் பயணம்!' என்ற கட்டுரையைப் படித்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னேன். எல்லாம் மிக்க கவனமுடன் கேட்டு வந்தார். நான் பேசும்போது குறுக்கே ஒன்று கூட கேட்கவில்லை. பேசி முடிந்ததும் கேட்டார்: 'உங்கள் அண்ணாத்துரை ஏன் அவ்வளவு கடுமையாக பெரியாரை ஹிட்லர் என்கிறார். ஹிட்லர் தர்பார்—சர்வாதிகாரம்! என்கிறார்? என்று சற்று கசப்புடன் கேட்டார், விளக்கங் கூறினேன். 'கேரவான்' கட்டுரையிலிருந்து அண்ணாவைப்பற்றி படித்துக் காட்டினேன். 'ஸ்வதந்தரா'வில் தோழர் பி. சி. கணேசன் எழுதிய பெரியார் அண்ணா கட்டுரைகளைப் படித்துக் காட்டினேன். பம்பாய் 'போரம்' பத்திரிகையில் பெரியாரைப் பற்றியும், அண்ணாவைப் பற்றியும் நான் எழுதிய பற்பல கடிதங்களையும், அதோடு எனது முயற்சியால் முதன் முதலாக, அப் 'போரம்' பத்திரிகையில் எனது நீண்ட இரண்டு காலம் கொண்ட, கடிதத்திற்குப் பக்கத்தில் நான் அனுப்பிவைத்த பெரியார் போட்டோவிலிருந்து 'பிளாக்' எடுத்து போட்டதையும் காண்பித்தேன். அதோடு 'ஸ்வதந்திராவில்' வெளியான எனது கடிதங்களையும், சண்டே அப்ஸர்வரில் எழுதியவைகளையும், 'விடுதலையில்' வெளியான சந்த்ராமைப் பற்றிய நீண்ட கட்டுரையையும் மற்றவைகளையும் கண்டு, கேட்டு, அறிந்து எனது ஆர்வத்தையும் முயற்சியையும், உழைப்பையும் மிக மிக மேலான வார்த்தைகளால் மெச்சி வாழ்த்தினார். நான் வெட்குமளவு உளங் குளிர்ந்து போனேன். உழைப்பின் பலன் மிகமிக உன்னதமானதே என்பதை உணர்ந்தேன்.

இடையில் சுந்தர்பாய் பாட்டி வந்து கருவேப்பிலைக் கொத்தைக் காண்பித்து இதைப் பருப்பு சாம்பாரில் போட்டால் சாப்பிடுவீர்களா என்று கேட்டார். எனக்கு வியப்பாய் இருந்தது! ஆனால் அவருக்கு அது தெரிவது அவசியமாயிருந்தது! கருவேப்பிலை இல்லாத குழம்போ, ரசமோ, மோரோ (தாளித்தது) கிடையாது. நாங்கள் உங்களைவிட அதிகமாகச் சேர்த்துக் கொள்வோம். போடுங்கள் தாராளமாக !—என்றேன். மகிழ்வுற்றுப் போனார்கள்!

'போட்டோ ஆல்பத்தை'க் காட்டி இவர்தான் தியாகராயர், இவர் டாக்டர் நாயர், இவர் பனகல் அரசர், இவர் 'சண்டே அப்ஸர்வர்' பாலசுப்ரமணியம், இவர் ராசகோபாலாச்சாரியார், இவர் மறைமலை அடிகள் (இந்தியை வெறுத்தவர்) இவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார் (தொழிற்சங்கத் தந்தை) இவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் (சென்னை முதன் மந்திரியாயிருந்தவர்) இவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை (தேசத் தொண்டர்) இவர் ப. ஜீவானந்தம் (கம்யூனிஸ்டு—ஆனால் ஆதியில் பெரியார் தயாரிப்பு) இவர்தான் காமராசர் என்று காட்டிக் கொண்டு அவரவர்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தேன்.

காமராசர் பேர் சொன்னதும் அப்படிக் கூடவா நீங்கள் பெயர் வைத்துக் கொள்கிறீர்கள் என்று கேட்டார் சந்த்ராம். ஆம் என்று கூறி... அதிகம்பேர் அப்படியில்லை என்றேன்.

காமத்திற்கெல்லாம் ராஜாவா அவர் என்று வேடிக்கையாகக் கேட்டார்கள்.

அதற்கு நானும் வேடிக்கையாகவே, ஆமாம்! அவர் காமத்துக்கெல்லாம் ராஜாதான். ஆனால் கல்யாணமே இதுநாள்வரை ஆகாத 'பிரம்மச்சாரி' என்றேன்.

கொல்லென்று சிரித்தார்கள். பிறகு எரியும் கட்சி எரியாத கட்சி—காமன் பண்டிகையையும் சிவன் என்பானின் சாபத்தையும் புராணக் குப்பைகளில் கண்டவாறு கூறினேன்.

அக்காலத்தில் அவ்வாறெல்லாம் அர்த்தமற்ற வேத இதிகாசக் கந்தல் புராணங்கள் எழுதி வைத்ததின் பலன்தான் இன்று பலப்பல சிக்கல் பிரச்னைகள் நம் இந்தியாவிலே உருவெடுத்து நம்மையெல்லாம் சிதறுடச் செய்கின்றன என்று உளம் நொந்தார் சந்த்ராம்!

அன்று காலை பத்து மணிக்குத் துவக்கிய பேச்சு இங்கே நிறுத்த வேண்டி வந்தது.

உனது கைக் கடியாரத்தில் மணியைப் பார் என்றார் சந்த்ராம்.

மணி போனதே தெரியவில்லை. மணி இரண்டு ஆகிவிட்டதே என்றேன்.

பகல் மணி இரண்டுக்குத்தான் சாப்பிட எழுந்தோம்.

கழுத்தில் கட்டிய கம்பளி 'ஸ்கார்வ்'பையும் எடுக்கவில்லை. காலில் இட்டப் 'பூட்ஸை'யும் கழற்றவில்லை. பிரயாணத்தில் அடிபட்டக் கம்பளி 'ஓவர் கோட்'டை மட்டும் வழியில் கழற்றினேனே—பளுவு தாள முடியாமல்—அவ்வளவுதான். மற்ற 'பேண்ட்' 'டபிள் பிரஸ்டு கோட்' உள்ளே கம்பளி பனியன் எல்லாம் போட்டது போட்டபடியேயிருக்கிறேன். பகல் இரண்டு மணியிலேயும் குளிருக்கு அடிமையாகவேயிருந்தேன். குளிக்கவும் முடியவில்லை.

சரி, கை மட்டும் கழுவிக் கொள் சாப்பிடலாம் என்றார் சந்த்ராம்.

அப்பப்பா! இந்தத் தண்ணீரென்ன இவ்வளவு 'ஐஸ்' மாதிரி இருக்கிறதே என்று கைகூட சரிவரக் கழுவவுமில்லை.

சமையலறையினுள் வாவென்று கூப்பிட்டார் சந்த்ராம்.

தயங்கினேன். காலில் 'பூட்ஸ்' என்று மெள்ள கூறினேன். என்னிடம் எல்லா சுதந்திரமும் உண்டு. அதிலும் உன் விஷயத்தில் அதிக சுதந்திரம்! அதெல்லாம் பரவாயில்லை வாவென்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே போய் மணையில் உட்கார வைத்தார்.

தட்டு, கிண்ணங்கள், ஆகியவைகளிலேயே இது உனக்காக சமைத்த 'ரைஸ்'—சோறு என்றார்கள் பாட்டி சுந்தர்பாய்! பொங்கல் கட்டி மாதிரி இருந்தது! 'தால்'—அதாவது பருப்புக் குழம்பு திக்காக இருந்தது! போடட்டுமா என்றார்கள்; போடுங்கள் என்றேன். பஜ்ஜி மாதிரி இருந்தது. ஏதோ வடைவகை என்று சாப்பிட்டேன். பிடிக்கவில்லை! கூட்டவியல் பச்சை பட்டாணி—மசாலா எல்லாம் போட்டு சமைத்திருந்தார்கள்; அதை மட்டும் நன்றாக இருந்ததென்று சுத்தமாகச் சாப்பிட்டேன். வடையை அவர்கள் யாரும் இல்லாத போது கடைசியில் தவித்துத் தவித்து வைத்திருந்து அவர்கள் வீட்டு வளர்ப்புப் பூனைக்கு ஊட்டித் தீர்த்து நானே சாப்பிட்டதாக காட்டிக்கொண்டேன்! பொங்கற் கட்டிச் சோற்றையுந் தின்று என்னை விடுவிக்க மறுத்துவிட்டது அப்பொல்லாத பூனை! அதை வேறு வழியில்லாது அப்படியே வைத்துவிட்டேன். கடைசியாக பால்பாயசம் வைத்திருந்தார்கள். அது மிகமிகப் பிரமாதம். அதற்காக வாவது இன்னொருதரம் சந்த்ராம் வீட்டிற்குச் செல்லலாமா என்றுகூட இப்போது எனக்குத் தோன்றுகிறது.

இப்படி ஒருவகையாக முதல் பஞ்சாப் விருந்து சாப்பாடு முடிந்தது.

அங்கிருந்த தேவ்ராஜ, அருண்குமார், என்ற இரு தோழர்களை உடன் கூட்டிக்கொண்டு திருட்டுத்தனமாக சிகரெட் பிடிக்க வெளிக் கிளம்பி விட்டேன்! அந்த இரு நண்பர்களும் பத்தாவது

12-ம் பக்கம்

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

கே : சர்வ கட்சிக் கூட்டங்களில் எப்படி நடந்து கொள்வது என்பதை பரந்த கண்ணோட்டக்காரர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தாவது புரிய வைக்கலாமா என்று யோசனை செய்துக் கொண்டிருக்கிறேன். அப்படிச் செய்யலாமா!

—ஆர். சேதுபதி, ஏழுகிணறு

ப : தோழரே எத்தனைத்தரந்தான் துளக்கி வைத்தாலும் பித்தளை பொன்னுகாதே.

*

கே : அய்யா அஞ்சாநெஞ்சன் அவர்களே, தி. க.—தி. மு. க. இரண்டும் மோதிக்கொண்டிருப்பது சரிதானு!

—எம். சுல்தான், சேலம்

ப : தோழரே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை திராவிட கழகத்தினிடம் மட்டுமல்லாமல், மாற்றுக் கொள்கை கொண்டவர்களிடம்கூட வீண் மோதலுக்குத் தயாராயில்லை. அப்போக்கினை விரும்பவுமில்லை. கருத்து வேறுபாட்டுக்காக கண்ணியத்தை இழப்பது அறிவுடைமையாகாது.

*

கே : கொடி எரிப்புப் போரில் வெற்றி யாருக்கு?

—எஸ். கலைமணி, திருச்சி

ப : வெற்றிபெற்றவர்களைத் தெரிவித்தால் நீங்கள் கொடுக்கப்போகும் பரிசு என்ன என்பதை முதலில்கூறுங்கள். பிறகு யான் விவரம் தருகிறேன்.

*

கே : காமராச நாடாரின் ஆட்சியைப் பற்றி பம்பாயில்போய் கண்டவாறு பேசிய ராஜகோபாலாச்சாரி சென்னையிலே அவ்வாறு பேசாதது ஏன்?

—ஆர். கடலைமுத்து, வடசென்னை

ப : ஆரிய ராமனே மறைந்திருந்து பிறரை வஞ்சித்தவனுயிற்றே, அந்த ராமனின் ரசத்தை வாரந்தோறும் பருகிவரும் ஆச்சாரியாருக்கும் அந்த...தானே யிருக்க முடியும்.

*

கே : இரமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வேதாளை கிராமத்தில் இளைஞர் முன்னேற்றக்கழகம் துவக்க என்போன்ற இளைஞர்கள் முன்வரும்போது வேதாளையில் இருக்கும் சில பிரஜா-சோஷலிஸ்ட் தோழர்கள் முட்டுக்கட்டையாக இருப்பதேன்?

—எஸ். எம். மீராசாகிப், வேதாளை

ப : பின்ன என்னவாம்! பிரஜா வேறு சோஷலிஸ்ட் வேருக பிய்த்துக்கொண்டு ஊசலாடும்போது நீங்கள் மட்டும் இளைஞர் கழகத்தைத் துவக்கி நடத்துவது அவர்களுக்கு மனம் பொறுக்குமா—அதனால்தான் இந்த 'மேதாவி'த்தனமான காரியத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

*

கே : திராவிட முன்னேற்றக் கழகத்தில் மறுபடியும் மெம்பர்களை எப்பொழுது சேர்த்துக் கொள்ளப்படும்.

—கே. ரங்கநாதன், திருப்பத்தூர்.

ப: மாநில மாநாட்டுக்குப் பிறகு உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி எல்லா ஊர்களிலும் துவக்கப்படும்.

மதிப்புரை

"உலக வாழ்வு"

தோழர் வீவேகி வரைந்துள்ள இந்நூலை சென்னை திராவிட கலா நிலையத்தார் வெளியிட்டுள்ளனர். கண்மூடி வழக்கங்களை முறியடிக்க சிறந்த சிந்தனை விருந்தை இந்நூல் அளிக்கிறது. விலை ரூ. 1.

திராவிட கலா நிலயம, 57 முக்தாருனிசா பேகம் தெரு, சென்னை–2,

"பிரிக்க முடியாதா ?"

உண்மைக் காதலை வெளிப்படுத்தும் இக்கருத்தோவியம் தோழர் கோ. வேந்தன் அவர்களால் தீட்டப்பட்டதாகும். விறுவிறுப்பான நடை. பெண்ணின் பெருமையை எடுத்துக்காட்டும் அரிய பொக்கிஷம். விலை 0—12—0.

வேந்தன் பதிப்பகம், அர்ச்சுனபுரம், பசுமாத்தூர் போஸ்ட் (வ. ஆ.)

"சாட்டை"

தோழர் எ. பி. நாகராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள இவ்வார இதழில் தமிழரசுக் கொள்கையை ஆதரித்து சில கட்டுரைகள் தீட்டப்பட்டிருக்கின்றன.

அலுவலகம் 'சாட்டை' சென்னை-14

முகவரி மாற்றம்

அன்புடையீர், வணக்கம். 17—8—55 புதன்கிழமையிலிருந்து எனது சித்திரக் கூடம் 242, தம்புசெட்டி தெரு என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்,

அன்புள்ள
அய்க்கண்

தென்னாட்டுக்கு இனி என்ன குறைச்சல்?

இந்திய ஜனதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் நவம்பர் மாதத்தில் தமிழ் நாட்டில் இரண்டு வாரங்கள் தங்கியிருக்க திட்டமிட்டிருக்கிறாரல்லவா! அதுசமயம் தீபாவளிப் பண்டிகையையும் தமிழ் நாட்டிலேயே கொண்டாடப் போகிறாராம்.

தென் இந்தியாவில் ஆண்டுக்கு ஒருமுறை இரண்டு மாதமாகிலும் ஜனதிபதி வசித்தால், தென்னாடு — வடநாடு பேதாபேதம் நீங்கிவிடுமென்று வடநாட்டு ஏகாதிபத்திய பிரகஸ்பதிகள் கண்டுபிடித்த திட்டத்தின்படியே மேற்கண்டவாறு ஜனதிபதி தீபாவளிப் பண்டிகையை தென்னாட்டில் கொண்டாடப் போவதாகவும் கூறப்படுகிறது.

ஆலைகளும், அணைக்கட்டு திட்டங்களும் வடக்கே—ஆரியத்திற்கு தென்னாட்டினரை அடிமைப்படுத்தும் 'திருவிழா' இங்கே!

தோழர்களே வடநாடு—தென்னாடு, அரசியல்—பொருளாதார வேறுபாட்டினைத் தீர்க்க டெல்லி தேவதைகள் வரம் கொடுக்கும் விந்தையைப் பாருங்கள் நடுநிலையிலிருந்து சிந்தித்து தெளிவு பெறுங்கள்!

பிறப்பு

பெங்களூர் 'ஈட்டி முனை' ஆசிரியர் இரா. புரட்சிதாசன் அவர்களின் வாழ்க்கைத் துணைவி இந்திராணி அம்மையாருக்கு 19—8—55 அன்று பெண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம்-

மாநில மாநாட்டு நிதிக்காக
4—9—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு
கோகலே மண்டபத்தில்
சிறப்புக் கூட்டம்
பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்
அவர்கள் தலைமையில்
கலைஞர் மு. கருணாநிதி
சொற்பொழி வாற்றுவார்.

கட்டணம் : ரூ. 1, அணா 8.
—சென்னை மாவட்ட தி. மு. க.

விரக்தி!

ஒரு கதை : சிகை அலங்கரிப்புத் தோழர் கந்தன் எப்பாடுபட்டோ ஒரு பொற்காசு (சவரன்) வாங்கித் தமது அடைப்பப் பெட்டிக்குள்ளேயே எப்போதும் வைத்துக்கொண்டு தொழிலுக்குப் புறப்படுவாராம்.

வாடிக்கை வாண்டையார் : ஏம்பா கந்தா! ஊர் எப்படி இருக்கிறது! என்று கேட்டாராம்.

ஊருக்கென்னுங்கோ! க்ஷேமந்தானுங்கோ! யார் கிட்டப் பார்த்தாலும் பொற்காசு நடமாடுதுங்கோ! என்றாராம் கந்தன்.

அப்படியே பல நாட்கள் ஓடின, பிறகு ஓர் நாள்...

கந்தன் கூறுவதின் குறிப்பை உணர்ந்து கொண்ட வாண்டையார் கந்தனுக்கும் தெரியாமல் அடைப்பத்தின் அடியில் கந்தன் வைத்திருந்த பொற்காசை அமுத்திக் கொண்டு விட்டார்!

வழக்கம்போல தொழிலுக்குவந்தார் கந்தனர்!

வாண்டையாரும் வழக்கம்போல என்னப்பா கந்தா! ஊர் எப்படி இப்போ! என்று கேட்டார்,

அதை ஏன் கேட்கிறீங்கோ! போங்கோ! ரொம்ப கெட்டுப்போச்சு! எவங்கிட்டேயும் செப்பாலடித்த காலணா கூட இல்லாமே அலைஞ்சு சாகிறாங்கோ! என்று கவலையோடு கூறினராம் கந்தனர்.

கந்தன் கையில் பொற்காசு இருக்கும்போது எல்லோரும் பணக்காரர்! பொற்காசை இழப்பு கொடுத்த பிறகு எல்லோரும் பஞை!...இது கதை;

இக்கதையைப் போலிருக்கிறது நமது ஆச்சாரியாரவர்கள் பம்பாய் மாதுங்காவில் திருவாய் மலர்ந்தருளி யிருப்பது!

பம்பாயில் ஆட்சி மிகமிக உன்னதமான நிலையிலுள்ளதாம்! மாதுங்கா வாழ் அசல் தமிழர்கள் (மடிசஞ்சிகள் என்று தவறுதலாகக் கருதப்படாது) அதிர்ஷ்டசாலிகளாம்! சென்னை ஆட்சி மிகமிக கீழ் நிலையிலுள்ளதாம்! ஆச்சாரியாரின் படப்பிடிப்பு எப்படி!

அந்தோ பரிதாபம்! ஆச்சாரியார்பிடியிலிருந்து ஆட்சி அதிகாரம் போனாலும் போச்சுது. அவர் மனம் எப்படி எப்படி யெல்லாம் நோகுது! போகுது! பார்த்தீர்களா!

அவர் கையில் ஆட்சியின் பிடி யிருந்தால் சென்னை ஆட்சி உலகிலேயே முதல்தரம், அப்படிக்கில்லையானுல் கழிப்பிலும் கழிப்பான ஆட்சி!

அந்தோ கந்தா! உன்னையல்லவோ நினைவூட்டுகிறார் எங்கள் ஆச்சாரியார்! கண்ணனாவது கண் தெரியாத வயதிலே வழிகாட்டி விடுகிறான்! அவனும் கைவிட்டுவிட்டான் போலும்!

என்னமோ பெரியவாளெல்லாம் இப்படிப் பேசுவது அழகல்ல, அப்பேச்சு இழுக்கையல்லவோ தேடித்தரும் என்று நம் கடைப்பயல் கூடக் கூறுவான்.

வாசகர்களுக்கு

வணக்கம். சென்ற வாரம் 9-ம் ஆண்டு துவக்க இதழ் சனிக்கிழமையன்று வெளியிட நேர்ந்தமையாலும் விடுமுறை காரணமாகவும், இவ்வாரம் 12 பக்கங்களாக வெளியிட்டுள்ளோம். இதற்காக பொறுத்தருள வேண்டுவதுடன் அடுத்த **வாரம் முதல் தொடர்ந்து வழக்கம்போல 14 பக்கங்களாக வெளிவரும்.**

ஏஜெண்டுகளுக்கு

வணக்கம். ஆகஸ்டு திங்கள் முடிய பட்டியல் அனுப்பி யிருக்கிறோம். அதில் கண்டுள்ளவாறு தொகையை உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—நிர்வாகி—திராவிடன்

திராவிடன்

சென்னை : 26—8—55 : வெள்ளி

நம்ம சர்க்கார் - வெறும் பொம்மை சர்க்கார்?

●

இந்தியத் துணைக்கண்டம் விடுதலை வாழ்வைத் துவங்கி ஏறக்குறைய எட்டாண்டுகள் முடிந்திருக்கின்றன. இந்த எட்டாண்டு காலங்களில் சுதந்திரத்தை "ஸ்வீகாரம்" எடுத்துக் கொண்ட காங்கிரசாரின் நிர்வாகத் "திறமை"யை நாம் பல தடவை கண்டிருக்கிறோம். வெள்ளையர்களைவிட வெறிபிடித்துப்போன இந்த ஏகாதிபத்தியக் கும்பல் செங்கோல் பிடித்த காலந்தொட்டு இன்றுவரை தென்னகத்துக்கு ஏதாவது நன்மைபயக்கும் செயல்கள்—வாழ்வுப்பிரச்னைகளை தீர்த்து வைக்கும் திட்டங்கள் செய்திருக்கிறதா எனில் இல்லை.

எந்தத் துறையை நாம் உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டாலும், தென்னகம் தள்ளியே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவ்வப்போது—அவர்கள் முகாமிலிருப்பவர்களே கண்டித்து வந்திருக்கின்றனர்.

வடநாட்டைவிட வளமும்—வசதியும் படைத்த தென்னாட்டில் ஒரு பெரிய தொழிற்சாலையோ அன்றி பெருத்த செலவில் அணைக்கட்டோ—மற்ற எந்த ஒரு பெரிய திட்டமும் இதுவரை செய்யப்படவில்லை.

ஆக இத்தகைய மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டு மத்திய சர்க்கார் செய்துவரும் அநீதியை நாம் பன்முறை இடித்துரைத்திருக்கிறோம். எனினும் அவர்களது போக்கு இன்னும் திருந்தவில்லை,

சேலத்திலே இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தும்படி பன்முறை வேண்டுகோள்கள் விடப்பட்டிருந்தும் இன்னும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நெய்வேலியில் நிலக்கரி சுரங்க வேலைகளைப்பற்றி ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமாகப் பேசுகின்றனர். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைப்பது போன்று இவர்களது ரயில்வே நிர்வாகம் இருந்து வருகிறது.

சென்னை நகரிலே யிருக்கின்ற இரண்டு பெரிய ஸ்டேஷன்களான சென்ட்ரல்—எழும்பூர் ஆகியவைகள் வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்டதாகும். நேரு சர்க்கார் பதவி நாற்காலியிலமர்ந்து ஒரு பெரிய ரயில்வே ஸ்டேஷன் அல்லது ஒரு புதிய இருப்புப் பாதை சென்னை மாநிலத்தில் போடப்படவில்லை.

இதையெல்லாம் நாம் கூறினோமானால் உடனே தேசீயத் திருமேனிகள், "ஏன் வேலூருக்கும் காஞ்சீபுரத்துக்கும் ரயில் பாதை போடப் போகிறோமே" என்று கேட்பர். இன்று வடக்கிலே நிர்மாணிக்கப்படும் ரயில்வே நிலயங்களையும்—போடப்படும் புதிய ரயில் பாதைகளையும் பார்த்தால் உண்மையிலேயே அதில் நூறில் ஒரு பங்குகூட சென்னை மாநிலத்தில் செய்யப்படவில்லை யென்பது புரியும். மலைகளைக் குடைந்து ரயில் பாதைகள் போடப்படுகின்றன வடக்கே! புதிய புதிய ரயில் பாதைகள் வடக்கே! பிரம்மாண்டமான ரயில்வே ஸ்டேஷன்கள் வடக்கே! குக்கிராமங்களுக்கெல்லாம் ரயில்வே ஸ்டேஷன் வடக்கே! வெள்ளையர்தம் ஆட்சிக் காலத்தில் சென்னையில் இருக்கும் சில பெரிய ஸ்டேஷன்களைக் கட்டியிரா விட்டால் சென்னை மாநிலத்தின் நிலைமை எப்படி யிருந்திருக்குமோ அறியோம்.

சென்னை நகரில் இப்போது கடற்கரை ஸ்டேஷனிலிருந்து தாம்பரம் வரைதான் மின்சார ரயில் பாதைகள் உள்ளன. இதை விழுப்புரம்வரை போட வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்து ஆண்டு பலவாகின்றன. இன்னும் ஆரம்ப வேலைகளே துவக்கப்படவில்லை இந்தப் பகுதியில் போக்குவரத்துக்காக மக்கள் படும் கஷ்டம் எழுதித் தெரிந்து கொள்வது என்றால் அது இயலாத காரியம்.

அதுபோன்றே சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து புறப்படும் நீண்டதூரம்செல்லும் ரயில்களிலும் இடமின்றித்தவிக்கும் பிரயாணிகளின் தொகை எண்ணிலடங்காது. ஆனால் ஆண்டுதோறும் தென்னகத்திலிருந்து ரயில்வே மூலம் கிடைக்கும் எண்ணற்ற கோடி ரூபாய்களைக் குவித்து வைத்துக் கொண்டு வடநாட்டிலுள்ள குக்கிராமங்களுக்கெல்லாம் ரயில் பாதையும், ரயில் நிலயங்களும் போடப்படுகின்றன.

பெரும் பெரும் திட்டங்கள்—சொன்னால் நெஞ்சு வெடித்துவிடும்—புதிய நகரங்களே வடக்கே நிர்மாணிக்கப்படுகின்றன, கண்ட்லா! ஒரு பெரிய துறைமுக நகரமாக இது எதிர்காலத்திலே உருவெடுக்கப் போகிறது. வடக்கேதான் இந்தத் திட்டமும். இம்மாபெரும் துறைமுக நகரத்தை தோற்றுவிப்பதன் காரணம், பம்பாய் துறைமுகத்திலே நெருக்கடியாம்! பம்பாய் துறைமுகத்தின் நெருக்கடியைப் போக்க இன்னொரு பம்பாயே கட்டப்படுகின்றது வடக்கே! பல கோடி ரூபாய்கள் செலவில்!

ஆனால் ஒரே ஒரு ரயிலை அதிகப்படியாக விடுவதற்கும் இங்குள்ள சர்க்கார், லால்பகதூர் சாஸ்திரியை நோக்கி—மத்திய சர்க்காரை நோக்கி அடிதண்டம் போடவேண்டி யிருக்கிறது.

வடக்கேயுள்ள ஸ்டேஷன்களில் எப்போதும் ரயில்கள் வந்த வண்ணமும் சென்ற வண்ணமுமாகவே யிருக்கிறது. இந்நிலையில் மேலும் மேலும் ரயில்பாதைகள்—புதிய புதிய ஸ்டேஷன்கள்—பல ரகமான ரயில் பெட்டிகள்!

இப்படி மத்திய சர்க்கார் நம் விஷயத்தை கவனிக்காமலிருப்பதை சென்னை சர்க்கார்—நம்ம சர்க்காராவது கவனிக்கிறதாயெனில் அதுவும் இல்லை. நேரு சர்க்காருக்கு எடுத்துக்கூறி திருத்துமளவுக்கு நம்ம சர்க்காருக்கு போதுமான எண்ணம் இல்லை தைரியமும் இல்லை.

"சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை வேண்டும்" என்று ஓர் தீர்மானம் சட்டசபையில் கொண்டுவரப்பட்டது, எல்லா கட்சியினரும் ஆதரித்தனர் இத்தீர்மானத்தை—ஆனால் நம் தொழிலமைச்சர் இருக்கிறாரே, அவர், தீர்மானத்தை வாபஸ் வாங்கும்படி கூறி—தீர்மானத்தையும் "ஆகஸ்டு" ஆகச் செய்துவிட்டார். ஏன் தெரியுமோ, நேருவின் சபாஷ் பட்டத்தைப் பெறுவதற்காகத்தான்.

ஆனால் தென்னகத்தின் மற்றோர் சர்க்கார்—மைசூர் சர்க்கார்—அதுவும் தேசிய சர்க்கார்தான். அச்சர்க்காரின் சட்டசபையிலே உறுப்பினர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள் — அந்த அமைச்சர் சென்னை அமைச்சரைப் போன்று வாபஸ் வாங்கும்படிக் கூறவில்லை. தானும் ஒத்துழைத்து அத்தீர்மானத்தை நிறைவேற்றச் செய்து மத்திய சர்க்காரையும் பணிய வைத்திருக்கிறார்.

என்ன அப்படிப்பட்ட தீர்மானம் என்று வாசகர்கள் அறிந்து கொள்ள அவாவுறலாம்.

மைசூர் மாநிலத்தில் உள்ள சாமராஜ நகருக்கும்—சென்னை மாநிலத்தில் உள்ள சத்தியமங்கலத்துக்குமிடையே இரயில் பாதை அமைக்க வேண்டும் என்பதேயாம்.

அங்குள்ள ராஜ்ய சர்க்கார்—மைசூர் சர்க்கார் தன்மானமுள்ள சர்க்கார். எட்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கேட்டுப் பார்த்து—கடைசியில் தலையில் குட்டி பணிய வைத்து விட்டது. மத்திய சர்க்காரும் இருப்புப்பாதை போட ஒப்புக் கொண்டது. சென்னை சர்க்கார் நேரு சர்க்காரின் கோலாகல வாழ்வுக்கு குனிந்துகொடுத்து வருகிறது. "சேலம் இரும்புத் தொழிற்சாலை தீர்மானத்தை" வாபஸ் பெறச் செய்ததினின்றே இதை நன்கு தெரிந்து கொள்ளலாம்,

நிற்க, மக்கள் சபையில் நானூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் அதில் எழுபது பேர்தான் தென்னகத்தின் சார்பாக சென்றிருக்கும் பிரதிநிதிகள், ஆகவே இவர்கள் என்னதான் கரடியாய்க் கத்தினாலும் ஓட்டுக்கு விட்டால் இவர்களது தீர்மானம் தூள்தூளாக்கப்படும். ஆகவேதான் தெற்கு புறக்கணிப்படுகின்றது. தென்னகத்திலிருந்து செல்லும் எழுபது உறுப்பினர்களுக்குள் கட்டுப்பாடு என்பதுப் குதிரைக் கொம்புதான்! இதைத் தெரிந்து கொண்ட நேரு பண்டிதரும் ஒருவருக்கு மந்திரி பதவியும் ஓரிருவருக்கு குட்டி மந்திரி பதவிகளும் அளித்து தலையில் தட்டி வைத்திருக்கிறார்.

நம்ம சர்க்காருக்கு அதிகாரமும் இல்லை—வடவருக்கு நம்மீது அன்பும் இல்லை. எனவேதான் இப்போது நம்ம சர்க்காரின் பதவிக் கொலுவில் அமர்ந்திருப்போர—நேரு சர்க்கார் ஆட்டிவைத்தால் ஆடும் பொம்மைகளாக இருக்கின்றனர், சென்னை மாநில அமைச்சர்களுக்கு மட்டும் அரசியல் யூகம் இருக்குமானால் மைசூர் சர்க்காரைப் பார்த்து வெட்கித் தலை குனிந்திருப்பர்.

எனவே நம்ம சர்க்கார்—ஒரு "மாதிரி" சர்க்காரா? நம்ம சர்க்கார்—உண்மையிலேயே பரிதாபத்திற்குரிய சர்க்காரோ? நம்ம சர்க்கார்—வெறும் பொம்மை சர்க்கார்தானோ? என நாம் ஐயுற வேண்டியிருக்கிறது.

அடுத்த வாரம்—தோழர் திருவேடம் வரைந்துள்ள **"பஞ்சாயில் இரண்டாவது நாள்"** எனும் கட்டுரையின் அரசியல் நிகழ்ச்சிகள் 2—9—55 திராவிடன் இதழில் வெளிவரும்.

வருந்துகிறோம்

1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் சர்வாதிகாரிகளில் ஒருவரும் சுயமரியாதை இயக்கத்தில் நீண்ட நாட்களாக பற்று கொண்டவரும் தி. மு கழகத் துவக்க ஆண்டில் பொதுக்குழு உறுப்பினரா யிருந்தவரும், சென்னை கோமளீஸ்வரன்பேட்டை வட்டத்தில் தி. மு. கழகத்தை அமைத்தவருமான நம் அருமைத் தோழர் **எம். எஸ். எம். மொய்தீன்** அவர்கள் 22-8-5-ம் நாளன்று இயற்கையெய்திய செய்தி அறிந்து பெரிதும் வருந்துவதுடன் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

●

திருச்சி மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் ஜி. பராங்குசம் அவர்களின் அருமைத் தந்தையார் **திரு குருசாமி** அவர்கள் 11—8—55 அன்று இயற்கை யெய்தியமைக்கு வருந்துவதுடன் நமது ஆழ்ந்த அனுதாபத்தை தோழர் பராங்குசம் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப் பித்தன்

26

(12—8—55 இதழ் தொடர்ச்சி)

பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் இருபதாண்டு கல்வி வளர்ச்சி சென்ற இதழில் கூறப்பட்டது. இந்த வாரம் மேலும் பத்தாண்டு கல்லூரி முதல் துவக்கப்பள்ளி முடிய எல்லாக் கல்வி வரலாறு பற்றியும் கல்வித் துறையில் ஈடுபட்டு பணியாற்றிப் புகழ் எய்திய சில பெரியார்களைப் பற்றியும் சுருக்கமாகவே கூறப்படுகிறது.

1871 லிருந்து 1881 வரை

1880—81-ம் ஆண்டு புள்ளி விவரப்படி திராவிடத்தில் 7 முதல்தரமான கல்லூரிகள் நடைபெற்று வந்தன. அவைகளில் பிரசிடென்சி காலேஜ், கும்பகோணம் காலேஜ், ராஜமுந்திரி காலேஜ் ஆகிய மூன்றும் அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வந்தன.

சென்னை கிருஸ்தியன் காலேஜ், திருச்சி எஸ். பி ஜி. காலேஜ், நாகை செயின்ட் ஜோசப் காலேஜ், சென்னை டவடன் ப்ராடஸ்டான்ட காலேஜ ஆகிய நான்கும் கிருஸ்துவப் பாதிரி சங்கங்களினல் நடத்தப்பட்டு வந்தன. 1882-ல் செயின்ட் ஜோசப் கல்லூரியானது நாகையிலிருந்து திருச்சினப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. இந்தியாவிலேயே சிறந்ததொரு கல்லூரியாக புகழப்பட்டு நல்லமுறையாக நடந்து வருவதாகும் செயின்ட் ஜோசப் கல்லூரி.

மேற்கூறப்பட்ட முதல்தரக் கல்லூரிகளுடன் 17 இரண்டாந்தரக் கல்லூரிகள் நடைபெற்று வந்தன. 1880-81-ம் ஆண்டு விவரப்படி. இவைகளில் 7 கல்லூரிகள் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்து வந்தன.

பெர்ஹாம்பூர், பெல்லாரி, கடலூர், சேலம், மதுரை, கள்ளிக்கோட்டை, மங்களூர் ஆகிய நகரங்களில் இக்கல்லூரிகள் நடந்துவந்தன. மற்ற பத்து கல்லூரிகளும் தனிப்பட்டோர் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்று வந்தன.

சென்னை பிரசிடென்சி கல்லூரியானது இ. பி. பவல் என்பார் பிரின்சிபாலாக இருந்த காலத்தில் நல்லதொரு முன்னேற்ற மடைந்தது குறிப்பிடவேண்டியதாகும். பவல் அவர்கள் சென்னை பிரசிடென்சி கல்லூரியை யாவரும் போற்றும் வகையில், முதல்தரமானக் கல்லூரியாக உயரச் செய்தார். பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் கல்வி இலாக்கா டைரக்டராக இருந்து திராவிட நாட்டின் கல்வி அபிவிருத்திக்கான காரியங்களைச் செய்தார். இவர் 1875-ம் ஆண்டு மார்ச் மாதம் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்றார். இவரது தொண்டின் பெருமையைப் புகழ்ந்து காலேஜ கட்டிடத்தில் இவருக்கு ஒரு நினைவுச் சின்னம் நிறுவினர் மாணவர்கள்.

பவலுக்குப் பின்னர் எட்மண்ட் தாம்சன் என்பார் பிரின்சிபாலாக பதவி ஏற்றார். இவர் காலத்தில் சுமார் 1200 பேர் பட்டம் பெற்று புகழ் எய்தினர்கள். இவர் காலத்தில் கல்லூரியானது வளர்ச்சி யடைந்து வளம் பெற்றது. இவரை 1884-ம் ஆண்டில் டாக்டர் டங்கன் என்பார் பின்பற்றி வந்த பிரின்சிபாலாகும். இதே காலத்தில், நீண்ட நாளாக புரபசராக இருந்து வந்த திரு. பி. அரங்கநாத முதலியார் கணித இலாக்கா தலைமைப் பதவியை ஏற்றது நினைவுகூற வேண்டியதாகும்.

கிரிஸ்தியன் காலேஜ் வளர்ச்சியின் சிறப்பானது ரெவரண்ட் வில்லியம் மில்லர் அவர்களைச் சார்ந்ததாகும். மில்லர் 1862-மஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை வந்தடைந்தார். வந்த நாளிலிருந்து காலேஜ வளர்ச்சிக்காகவே பாடுபட்டு வந்தார். இந்தியாவிலேயே முதல்தரமானக் கல்லூரியாகக் கருதப்பட்டு புகழப்படும் அளவிற்கு கிருஸ்தியன் காலேஜை கொண்டு வந்தவர் மில்லர்தான் எனக் கூறின் மிகையொன்றுமிராது. மில்லர் அவர்களின் விடா முயற்சியினலும் கல்வித்தொண்டின் ஆர்வத்தாலும் கிருஸ்தியன் கல்லூரியின் புகழானது இந்தியா முழுவதும் பரவலாயிற்று. கல்லூரியில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. ஒவ்வொரு துறையும் விரிவாக்கப்பட்டு புதிய சாதனங்களுடன் கூடிய முதல்தரமான கல்லூரியாக வளர்ந்து வந்தது. இலக்கியம், விஞ்ஞானம, தத்துவம், மதம் பற்றிய ஆராய்ச்சிகளுக்கெனவும் அவைகளின் உயர்விற்கெனவும் 'கிருஸ்தியன் காலேஜ் மாகசின்' என்ற பெயரில் 1884-ல் ஒரு மாதாந்திர பத்திரிகை துவங்கப்பட்டது, ஸ்காலர்ஷிப் முறை ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் கல்வித்திறமை வளர்க்கப்பட்டது, 1882-ல் பார்ப்பனர்கட்கென்றும், 1888-ல் கிருத்துவர்கட்கென்றும் ஹாஸ்டல்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்வி முன்னேற்றக் காரியத்தில் இப்படிப்பட்ட சாதி சனியன்களை சமாளிக்க முடியாது தவிக்க நேரிட்டது கல்வி முன்னேற்றத் தொண்டர்களால் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

திராவிட நாட்டுக் கல்வி சரித்திரத்தில் கும்பகோணம் அரசினர் கல்லூரி சிறந்த இடம் பெற்றுள்ளதாகும். மிஸ்டர் டபிள்யூ. போர்ட்டர் என்பார் 1863-ல் கும்பகோணம் கல்லூரியின் நிர்வாகத்தை ஏற்றார். கும்பகோணம் கல்லூரியை 'தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ்' என்று மக்கள் யாவரும் புகழும்படி செய்த பெருமை போர்ட்டர் அவர்களையே சாரும். இது சம்பந்தமாக 1872-ம் ஆண்டு பரீட்சையில் தேறியவர்கள்பற்றி கல்வி இலாக்கா டைரக்டர்கள் கூறியது குறிப்பிடத்தக்கதாகும்: 'இக்கல்லூரியில் பி ஏ. பட்டத்திற்கான வகுப்புகள் நடந்து வருகின்றன. இக்குறுகிய காலத்திற்குள் பிரசிடென்சி காலேஜில் தேறிய மாணவர்களைவிட இருமடங்கு மாணவர்கள் இக்கல்லூரியில் தேர்வு அடைந்திருப்பது மிஸ்டர் போர்ட்டர் அவர்களின் திறமையினல்தான்; இச்சிறப்பு அவருக்கே உரியதாகும். இத்திறமை மிக்க பிரின்சிபால் நிர்வாகத்தில் கும்பகோணம் கல்லூரியானது தென்னிந்திய கேம்பிரிட்ஜ ஆகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை' எனக் கூறினர். அவர் கூற்று மெய்யே யாகிவிட்டது,

1878-ல் போர்ட்டர் அவர்கள் மைசூர் மகாராஜாவின், ட்யூட்டராக நியமனம் செய்யப்படவே அவரிடத்தில் மிஸ்டர் டி. கோபால்ராவ் நியமிக்கப்பட்டார். இவரும் மக்களால் பெரிதும் போற்றப்பட்டார். கோபால்ராவிற்குப் பின்னர் 1882-ல் மிஸ்டர் ஜி. எச். ஸ்டுவர்ட் என்பார் பிரின்சிபாலாக நியமிக்கப்பட்டார். இவர் கேம்பிரிட்ஜ் யூனிவர்சிட்டியில் பிரபல கணித ஆசிரியராக இருந்தவர். இவர் காலத்தில் கும்பகோணம் காலேஜானது பலவித முன்னேற்றங்களையடைந்தது.

ஆரம்பக் கல்வி

இக்காலத்தில் ஆரம்பக் கல்வி நிலையும் சற்று உயர்வடைந்தது எனக் கூறலாம். கல்வி இலாக்கா டைரக்டராக இருந்த மிஸ்டர் எச். பி. கிரிக் அவர்களுடைய 1881-ம் ஆண்டு பிரத்யேக அறிக்கையில் இவ்வுண்மை தெரியக்கிடக்கிறது. துவக்கப் பள்ளிகள் பல சர்க்காரின் கிராண்ட் உதவியினல் ஏற்பட்டனவாகும் திண்ணைப் பள்ளிகள் கூட கிராண்ட் உதவி யளிக்கப்பட்டு நல்ல முறையில் ஆதரிக்கப்பட்டன. முனிசிபாலிட்டிகளும் லோகல் பண்ட் போர்டுகளும் ஆரம்பக் கல்வி முன்னேற்றத்தில் அக்கரை கொள்ள வேண்டும் என சர்க்காரால் வற்புறுத்தப்பட்டனர். ஆகவே முனிசிபல் லோகல் போர்டுகளின் முயற்சிகளினலும் ஆரம்பக் கல்வி நிலை உயர்வடைந்தது எனக் கூறவேண்டும்.

1870—71-ம் ஆண்டில் சர்க்கார் உதவி பெற்று நடந்து வந்த துவக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 2414 ஆகும். இவ்வெண்ணிக்கையானது 1879—80ல் 4625 ஆக உயர்ந்தது. 1880—81-ம் ஆண்டு கணக்குப்படி 5845ஆக வளர்ச்சியடைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும், முனிசிபாலிடி லோகல்பண்ட் போர்டுகளால் நடத்தப்பட்டுவந்த சில துவக்கப் பள்ளிகள் சர்க்காரால் நடத்தப்படும் பள்ளிகளாகவே கருதப்பட்டு கணக்கெடுக்கப்பட்டன. 1881-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி சர்க்காரால் நடத்தப்பட்டுவந்த துவக்கப்பள்ளிகள் 1333 ஆக உயர்ந்திருந்தன, சர்க்காரின் கிராண்ட் உதவியோ மற்ற எவ்வித உதவியையோ பெறாது மக்களின் உதவியினலேயே நடந்துவந்த பள்ளிகளும் இருந்துவந்தன என்பது தெரியவேண்டியதாகும் இப்படிப்பட்ட பள்ளிகள் 1870—71-ம் ஆண்டு கணக்குப்படி 936 ஆகவும், 1871—72-ல் 1774 ஆகவும், 1879—80-ல் 4148 ஆகவும் 1880—81-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி 5215 ஆகவும் வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஆகவே 1881-ம் ஆண்டில் துவக்கப்பள்ளியின் வளர்ச்சியானது

சர்க்கார் கிராண்ட் உதவி பெற்ற துவக்கப் பள்ளிகள்	5845
சர்க்கார் நேரடியாக நடத்தி வந்த (முனிசிபல் லோகல் போர்டுகள் நடத்தியவைகள் உட்பட) துவக்கப் பள்ளிகள்	1232
சர்க்கார் கிராண்ட் உதவி பெறுமல் (தனிப்பட்டவர்கள் பொதுமக்கள் உதவியால்) நடைபெற்று வந்த துவக்கப் பள்ளிகள்	5215
ஆக கூடுதல்	12292

இவ்விவரமானக் கணக்குப்படி 2550 பேருக்கு ஒரு துவக்கப் பள்ளிக்கூடம் இருந்து வந்தது. அல்லது 450 பள்ளிக்கூட வயது பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் இருந்து வந்தது எனத் தெரிய வருகிறது.

—(தொடரும்)

நாங்குநேரிவட்டார ஆதித்திராவிட சங்கம் (பம்பாய்)

பம்பாய் தாராவியில் நான்குநேரி வட்டார ஆதித் திராவிட சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் குழுத் தலைவர் திரு எஸ். மகாராசன் அவர்கள் தலைமையில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கடந்த ஆண்டு பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றிய திரு. வி. பி, நடராசன் அவர்களின் மனைவி இறந்தமை முன்னிட்டு 2 நிமிஷம் எழுந்து நின்று மறியாதை தெரிவிக்கப்பட்ட பின் கடந்த கூட்ட நிகழ்ச்சிகள் வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டு எல்லோரும் ஒப்புக் கொண்டபின் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

விற்பனைக்குத் தயார்!

- 50 வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களை மய்யமாகக் கொண்டது!
- மாணவர்களின் சிறப்பான பொக்கிஷம்!
- பாலு பிரதர்ஸின் அழகான மூவண்ண முகப்பு!

கிரேக்க மாவீரன்

அலெக்சாண்டர்

தீட்டியவர் : கௌதமன்

பக்கங்கள் 228. : விலை ரூபா 2.

வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கழிவு. முன்பணம் அனுப்ப வேண்டும். தபால் செலவு இனம்.

கிடைக்குமிடம் :—

பாண்டியன் பதிப்பகம்

16, நீலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை-1

"போர்" ஆட்ட பொம்மைகள்!

சந்தி சிரிக்கிறது!

காச நோய் தடுப்பு ஊசி (பி. ஸி. ஜி.) குத்தும் சென்னை சர்க்காரின் திட்டத்தை முன்னாள் முதலமைச்சரான ஆச்சாரியார் அவர்கள் எதிர்த்து "வீரப் பிரதாபம்" செய்து வருவதும், ஆச்சாரியாரின் இப் "பேர்" ஆட்டத்துக்கு "அவாள்" பத்திரிகைகள் பெரும் விளம்பரம் தந்து வருவதையும் பொதுமக்கள் அறிந்ததேயாகும்.

காச நோய் தடுப்பு ஊசிபோடுவதைக் கண்டு இன்று நீலிக்கண்ணீர் வடிக்கும் இதே ஆச்சாரியார்தான் தாம் பதவியிலிருந்தபோது இந்த முறையை ஆரம்பித்து வைத்தார் என்று சுகாதார அமைச்சர் ஷெட்டி அவர்கள் சென்னை மேல் சபையில் சென்ற வாரம் குறிப்பிட்டிருக்கிறார். கண்ணன் காட்டும் வழிகளில் இதுவும் ஒன்று அல்லது சக்கரவர்த்தி திருமகனாரின் லீலா வினோதங்களை எடுத்துக் காட்டும் விளைவுகளில் இதுவும் ஒரு வினோதமா என ஐயுற வேண்டியிருக்கிறது.

நம் நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளை இருகொடி ஏந்திகள் என்று அரசியல் விவரம் அறிந்தோர் கூறுவர். அதுபோலவே ஆச்சாரியாரும் அரசியல் துறையில் அடிக்கடி தனது இரட்டை நாக்குகளை நீட்டுகிறார்! மறைந்த ஆர். கே. சண்முகம் அவர்கள் ஆச்சாரியாரின் இந்த இரட்டை நாக்குப் போக்கினை நன்கு அறிந்துதான் அன்றே குல்லுகபட்டரென்ற பட்டத்தையும் அளித்தார் போலும்!

நடைபெறும் என்றும் தப்பட்டை அடித்தார்.

இந்தப் "போர்" இருக்கிறதே ஒருநாள் போராட்டமல்ல, ஒரு நிமிடப் போராட்டமல்ல. உலகமே கிடுகிடுக்கும், உலக வல்லரசுகள்கூட திகைத்துவிடும். எல்லைக் கமிஷன் இந்தத் தேதியில் நிறுவிவிடுகிறோம் என்று இந்தியப் பிரதமர் உறுதிமொழி கூறினாலன்றி போராட்டம் நிற்காது. பளார்—பளார் என்று கொக்கரித்தார். நாம் கூட தோழர் சிவஞானத்துக்கு இந்த அளவு சொரணை ஏற்பட்டிருக்கிறதே என்று பூரித்தோம் அது நீடித்திருக்க வேண்டும் என்றும் மனமார எண்ணினோம்.

ஏனெனில் 1937-ம் ஆண்டு கட்டாய இந்தி எதிர்ப்பின்போது தோழர் மா. பொ. சிவஞானம் செய்த துரோகமும், 1948-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அசகாய சூரத்தனம் பேசிவிட்டு அடுத்த நாள் புறமுதுகிட்டு ஓடி ஒளிந்து கொண்டு இந்தி எதிர்ப்பாளர்களைக் கண்டவாறு தூற்றிய படலத்தையும், பின்னர் சித்தூர் போராட்டத்தில் ஆழந்தெரியாமல் காலைவிட்டு அவஸ்தைப்பட்டு, அந்த ஆத்திரத்தை, அப்போராட்டத்தில் தூய்மையான தொண்டாற்றிய தி. மு. க. தோழர்கள் மீது காட்டி மூக்கறுபட்ட விவரத்தையும் நாடு அறிந்தேயிருக்கிறது எனவே தான் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் இந்தத் தன்மானமாவது நிலைத்து நிற்கட்டும் என்று எண்ணினோம்.

ஆனால் நாம் எதிர்பார்த்ததைப் போல அல்லாமல் தோழர் ம. பொ. சிவஞானம் தனக்கே உரித்தான வகையில் மீண்டும் தனது 'போர்' ஆட்டத்தை வாபஸ் பெற்றுவிட்டதாக 23-ந் தேதியே 'பிரகடனப் படுத்திவிட்டார்!'

சென்னை சர்க்கார் சார்பில் கல்வி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் தோழர் சிவஞானத்தை அழைத்துப் பேசிவிட்டாராம்! என்ன பேசினார் தெரியுமா? "ஏற்கனவே சட்டசபையில் நான்தான் தெரிவித்திருக்கிறேனே—இவ்வாண்டு இறுதிக்குள்—ஆந்திர—சென்னை சர்க்காரிடையே நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் முடியுமென்றும், அது இறுதிக் கட்டத்தை யடைந்ததும், வடஎல்லை பாதுகாப்புக் கமிட்டி உள்பட மற்ற எல்லா கட்சிகளுக்குமே தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்கப்படும்" இதைவிட உமக்கு வேறு ஒன்றும் உறுதி கூற முடியாது. புரிந்து கொண்டீரா? எனவே உமது 'போர்' ஆட்டத்தை ஒத்திவையும் என்று கூறினாராம்! தோழர் ம. பொ. சி. அவர்களுக்கு இந்தப் பேச்சு வார்த்தையிலே உச்சிகுளிர்ந்து விட்டதாம்! எனவே 'போர்' ஆட்டமும் குளோஸ் ஆகிவிட்டது!

"எல்லைக் கமிஷன் நிறுவப்பட வேண்டும். நிறுவப்படும் தேதியையும் உடனடியாகத் தெரிவித்தாக வேண்டும், இல்லையேல் போராட்டம் எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்த முடியாது" என்றுதான் ம. பொ. சிவஞானம் முண்டா தட்டினார். ஆனால் இப்போதோ தனது மீசையை இன்னும் தொங்கவிட்டுக் கொண்டு ஓடுகிறார்! பரிதாபம்! பரிதாபம்!!

இந்த லட்சணத்தில் இவரின் "போர்" ஆட்டத்தில் கலந்து கொள்ள மற்ற கட்சி தலைவர்களையும் அழைக்கிறார்! அதுமட்டுமா கோவா போராட்டத்தைக் கூட இரண்டே வாரத்தில் முடித்து விடுவேன் என்று பீத்துகிறார்!

முன்பு தலைகொடுத்துத் தலைநகரைக் காப்பாற்றினாராம். இப்போது வாலைக் கொடுத்து வட எல்லையைக் காப்பாற்றப் போகிறாராம்! இப்படியாக போராட்ட வாபஸ் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார் ம. பொ. சி. ஐயகோ தலையும் வாலும் போய்விட்டால் மிச்சமிருப்பது முண்டமல்லவா? அடுக்குச் சொல் அமைய வேண்டுமென்பதற்காக எவ்வளவு அவலட்சணத்திற்கு ஆளாகிறார் பார்த்தீர்களா? சொந்த சரக்கு பூஜ்யம்! 'காப்பி' அடிப்பதிலாவது சிறிது புத்திகூர்மை வேண்டாமா?

அதுசரி சொந்த புத்தியைக் கொண்டா இந்த "போர்" ஆட்டத் திருவிளையாடல்களில் இறங்கியிருக்கிறார் ம. பொ. சிவஞானம்! எல்லாம் அந்த குல்லுகபட்டர் ஆட்டிவைக்கும் படலம்தானே!

ஆச்சாரியாருக்குத்தான் தொட்டதெல்லாம் தோல்வியென்றால் அவரின் சிஷ்யப்பிள்ளை யென்று கூறும் சிவஞானத்துக்கு அனைத்தும் அவலட்சணமாய் முடிகிறது. இதற்காக நமது அனுதாபம் உரித்தாகுக.

—வீரன்

*

தலைகொடுக்கும் தமிழனின் "போர்"

குல்லுகபட்டரின் படலம்தான் இந்தக் கன்றாவி யென்றால், அவரின் சீடர்களில் ஒருவர் என்று கூறிக்கொள்ளும் தோழர் ம.பொ. சிவஞானத்தின் அரசியல் செப்படி வித்தைகள் அதோகதியாய் விட்டன. எல்லைப் போராட்டத்தைத் துவக்கியே தீருவேன் என்று தலை கீழாய் குதித்தார்! ஆகஸ்டு 1-ம்தேதி போராட்டம் நிச்சயம். ஆண்டவனே தடுத்தாலும் எனது போராட்டம் தடைபடாது; எல்லைக் கமிஷன் உடனே நிறுவப்படும் என்று இந்தியப் பிரதமர் நேருஜியே உறுதியளிக்க வேண்டும். இன்றேல் போர், போர், போர் என்று "போர்" அடித்தார்!

இந்நிலையில் நேரு பண்டிதரிடமிருந்து ஒரு கடிதம் வந்துவிட்டதாகவும், ஆதலால் தனது "போரை" ஒத்தி வைப்பதாகவும் ஜூலை 31-ந்தேதி பீத்தினார். ஆகஸ்டு 1-ம்தேதி கடந்து அந்தக் கடிதத்தைப்பற்றி தனது குழுவுடன் ஆராய்ச்சி நடத்தியதில் அக்கடிதம் தங்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதா யில்லையென்றும் அதற்குப் பதிலாக வேதனையைக் கிளறுவதாய் இருப்பதாகத் துள்ளிக் குதித்து மீண்டும் "போர்" காட்சி உண்டு என்றும் ஆகஸ்டு 24-ம் தேதி சட்டசபைக்கு வெளியே அது

நடக்க இருப்பவை

அறிஞர் அண்ணா

அவர்களின் சுற்றுப்பயணம்

கடலூரில் சிறப்புக் கூட்டம்

28—8—55 ஞாயிறுகாலை 9மணிக்கு கடலூர் (என். டி.) நியூ சினிமா தியேட்டரில் மாநில மாநாட்டு நிதிக்காக புதுவைத் தோழர் சிவப்பிரகாசம் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். அறிஞர் அண்ணா, எ. கோவிந்தசாமி எம். எல். ஏ., பேசுவர்.

நன்கொடை அணா 4. 8.

நெல்லிக்குப்பத்தில்

28-8-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு தி. மு. கழக சார்பில் திரௌபதியம்மன் கோயில் திடலில் மாபெருங் கூட்டம் நடைபெறும். தெ. ஆ. மாவட்ட தி. மு. க. செயலாளர் இரா. சாம்பசிவம் தலைமையில் அறிஞர் அண்ணா, அ. பொன்னம்பலனார் பேசுவர்.

தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

28—8—55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் பாரீஸ் ஹாலில் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில் நடைபெறும் என்றும் அதுபோது பொதுக்குழு உறுப்பினர் தேர்வு மற்ற முடிவுகள் நிறைவேற்றப்படும் என்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருமாறும் செயலாளர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

இலங்கை

இலங்கை தி. மு. கழக சார்பில் வள்ளுவர் தினப் பொதுக்கூட்டம் நாராயண குரு மண்டபத்தில் (வாயாஸ் பிராட்வே) 28—8—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு நடைபெறும். தோழர், எம். ஐ. இராசமணி தலைமையில் பா. சு. கீதம் இரா. அதி. மணி, சி. தலுவத்த, நா. பழனிநாதன், தோழியர். ஆனந்தீஸ்வரி பாலசுப்பரமண்யம் பேசுவர்.

பம்பாய்

தாராவி தி. மு. க. கிளையின் துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் துணைத்தேர்தல் 28—8—55 ஞாயிறு மாலை 6-30-மணிக்கு திராவிடரகத்தில் தேர்தல் அதிகாரி தோழர். வள்ளிநாயகம் தலைமையில் நடைபெறும்.

பெங்களூர்

28—8—55 ஞாயிறுமாலை 5-30 மணிக்கு சிராமபுரம் வ. உ. சி. திடலில், லேபர் காலனி பகுத்தறிவு மன்ற துவக்க விழா நடைபெறும். பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். வி. பதி, அவர்கள் தலைமையில் ப. செல்வராசன், வீ. முத்து. கிருஷ்ணன், ந. இராமசாமி பேசுவர்.

மாயவரம்

ரயிலடி அஞ்சல் நிலையத்துக்கு எதிர் திடலில், 28—8—55 ஞாயிறு மாலை 6-மணிக்குத் தில்லையாடி வள்ளியம்மை படிப்பகத் துவக்க விழா நடைபெறும். தோழர் இரா. சண்முகம் தலைமையில் கவிஞர் கண்ணதாசன், ஆர். பாலகுருசாமி, கிட்டப்பா, சவுந்தர் பேசுவர்.

சிந்தேரி

27—8—55 சனி மாலை 6 மணிக்கு மறுமலர்ச்சி மன்றத் துவக்க விழா வ. ஆ. சித்தேரி கிராமத்தில் நடைபெறும். தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமையில் காட்பாடி வி. எ. பகுல், வெ. அ. இளஞ்செழியன், சி. எ. வரதராசன் பேசுவர்.

பம்பாய்

தாராவி தி. மு. க.

17-8-55 புதன் இரவு 8-30மணிக்கு ப. தி. மு. க. தாராவி கிளையின் அவசர செயற்குழுக் கூட்டம் திராவிடரகத்தில் தோழர் ஏ. எல். பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, கடந்த செயற்குழுக் கூட்ட நிகழ்ச்சி படித்துக் காண்பிக்கப்பட்டு திருத்தமின்றி குழு உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அஞ்சல் போக்குவரத்துகள் படித்துக் காண்பிக்கப்பட்டது.

துணைச்செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புகளிலிருந்து பணியாற்றிய முறையே தோழர்களான, சா. தர்மராசன், கே. எ. சற்குணம் ஆகியோரின் விலகல் கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விலகிய தோழர்களின் இடத்தை நிரப்ப 28—8—55 ஞாயிறன்று துணைத்தேர்தல் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. தேர்தல் சம்பந்தப்பட்ட காரியங்களைச் செய்ய செயலாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

அலுவலகத்திற்கு வரும் வழிபாதை மிகவும் சீர்கேடான முறையில் இருப்பதால் அதைச் செப்பனிட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் உரிமையை செயலாளருக்கு கொடுக்கப்பட்டது

இலங்கை

இராமநாதபுர மாவட்டம் செல்வரசு கோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் (இலங்கை) பொதுக் கூட்டம் கடந்த 2—8—55 செவ்வாய்கிழமை கொள்ளுப்பட்டி காலிவீதி 510/4 இலக்க இல்லத்தில் தலைவர் திரு அ.ச. வேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப்பின் செயலாளர்—பொருளாளர் ஆகியவர்களால் கடந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சி வரவு செலவு கணக்கு — பம்பாய் கடிதக் குறிப்புகள் சமர்ப்பிக்க சபை ஒப்பக் கொள்ளப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் (இலங்கை கிளை) தலைவர் உயர்திரு வை. சு. சிதம்பரம் அவர்களின் வாழ்க்கைத் துணைவி காளியம்மாள் தமிழகத்தில் இயற்கை எய்தியதைக் குறித்து சம்மேளனம் தனது அனுதாபத்தை தலைவர் அவர்களுக்கும் அன்னார் குடும்பத்தார்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

விவாத அரங்கில் தோழர்களான ம. சி. அழகையா, சி. விஸ்வநாதன், க. சிவானந்தம், சு. மாதவன், து. ப. இசக்கன், கே. முருகன், இரா. ச. பொன்னம்பலம் மற்றும் சிலரும் பங்கு பெற்று சிறப்பித்தார்கள். பின் கீழ் கண்ட தீர்மானமும் நிறைவேறியது.

தாழ்த்தப்பட்டோர் சமூகத் தலைவர்களில் ஒருவரும் சென்னை சட்டசபைத் தலைவருமான உயர்திரு ஜே. சிவசண்முகம் பிள்ளை எம். ஏ. அவர்கள் 'இந்திய பொது சேவைக் கமிஷனராக' உயர்பதவி பெற்றமைக்கு சம்மேளனம் உளமகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது.

தமிழகம் செல்லும் முன்னாள் பொருளாளர் திரு சு. மாதவன் அவர்களுக்கு பிரியா விடை கூறப்பட்டது.

*

முத்தமிழ் மன்றம்

14-8-55 ஞாயிறு மாலை 5-மணிக்கு கொழும்பு 75/4 சிந்துபிபட்டித் தெருவிலுள்ள முத்தமிழ் மன்றத்தின் சார்பில் திரு. வி. க. பிறந்த தின விழா திருவாளர் தி. இளங்கதிர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் பி. எம். ஜலால், பி. தம்பிதுரை, நா. பழனிநாதன், பா. ச. கிதம், ஜே. சோமசுந்தரம், மு. க. இராசன், உமார் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் அடுத்து பேசிய இ. தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. அதிமணி அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டதாவது, தி. வி. க. தனது வாழ்வை தொழிலாளர்களின் துயர்துடைப்பதற்கும் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்மொழியின் உயர்வுக்காகவும் அர்ப்பணித்தார். அவரது பிறந்த தினத்தை கொண்டாடும் நாம் அவரைப்பற்றி புகழ்ந்து பேசிவிட்டு வீணே செல்லாது ஓரளவிற்கு அவர் சென்ற பாதையில் செல்வோமாக, அவர் கண்ட கனவை நனவாக்கு முகமாக செயல்படவேண்டும். அதுவே அவருக்கு நாம் காட்டும் நன்றி என்றார். இறுதியாக இ. தி. மு. க. முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவரான டி. எம். பீர்முகம்மது பேசும்போது 'திரு. வி. க வைப்பற்றி மக்கள் தெரிந்துகொள்வதற்கு முடியாத அளவிற்கு மறைக்கப்பட்டுள்ளது. அத்திரை கிழித்தெறியப் படவேண்டும், திருக்குறளே திரு வி. க., திரு. வி. க. வே திருக்குறள் என்பதற்கிணங்க இருந்தது அவரது வாழ்க்கை. என்று குறிப்பிட்டதோடு அவரைக் கொண்டாட முன்வந்த முத்தமிழ் மன்றத்தினரையும் நான் பாராட்டுகிறேன் என்றார். கூட்டம் சுமார் 9 மணியளவில் துணைச்செயலாளர் எல் தருமராசன் நன்றி நவில இனிது முடிவுற்றது.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது.

கோவாவும் ஜீவாவும் தொடர்ச்சி

டிலுள்ள கம்யூனிஸ்டுகள் உண்மையான பொதுவுடமை வாதிகளாயிருந்தால்தானே உயர்ந்த பண்பைப் பின்பற்ற முயலுவர்.

என். வி. என் அவர்கள் பேசி முடித்ததும் கூட்டமே கலைந்து விட்டது. பிறகு கம்யூனிஸ்டு தலைவர்கள் ஜலப்பரப்பைப்பார்த்துப் பேசியதாக கேள்விப் பட்டோம். அந்த ஆத்திரத்தில் இப்படி யெல்லாம் எழுதுகிறார்கள் போலும்.

"தி. மு. க. தலைமை சென்னையில் நேற்று வெறியாட்டம் நடத்தியது கூடியிருந்த இரண்டு லட்சம் மக்களின் நிந்தனையை சம்பாதித்துக் கொண்டது."

இப்படி எழுதுகிறார் ஏக இந்தியா வாதி! இவ்வளவு நேரம் என். வி. நடராசன் தலைமையில் வந்த தி மு க கோஷ்டி என்று கூறிவந்த ஏடு திடீரென்று தி மு. க. தலைமை என்று எழுத ஆரம்பித்து விட்டது. சரி! அப்படியே இருந்தாலும் சென்னையில் வெறியாட்டம் நடத்தியது தி. மு க. தலைமை. கூட்டம் நடந்த இடமோ ஐகோர்ட் கடற்கரை, பேசியவரோ என். வி. நடராசன். ஆனால் அது எழுதுகிறது தி. மு. க. தலைமை சென்னையில் வெறியாட்டம் நடத்தியது. என்று,

இப்படி யெல்லாம் இல்லாததை எழுதுவதும்—திரித்தலும் புனைத்தலும் இதற்கு வாடிக்கையான வேடிக்கைபோலும் — அந்த அளவுக்கு வரண்டு போய் விட்டது அவர்களது கொள்கை!

ஆக இவ்வளவும் எழுதிய அந்த ஏடு தன்னுடைய முதல்பக்கத்தில் புகைப்படங்களை தாங்கி வெளி வந்துள்ளது. மேடையில் நான்கு தலைவர்கள் அமர்ந்துள்ள காட்சி அது. யாரார் தெரியுமோ அந்த நான்கு தலைவர்கள், 'கோவா வீரர்' ஜீவா, கல்விதிட்ட எதிர்ப்பு வீரர் காமரேட். ராமமூர்த்தி, பழைய தேசபக்தர் அண்ணாமலை, பழைய மந்திரி ராஜாராம் ஆகியோர். நம்முடைய கண்ணியத்தை குறைகூறிய இக்கம்யூனிஸ்டு ஏடு முதல் பக்கத்தில் மேடையில் அமர்ந்திருந்த பற்ற 'கட்சித் தலைவர்களின் உருவங்களை வெட்டித் தள்ளிவிட்டு காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் தலைவர்களின் புகைப் படத்தை மட்டும் வெளியிட்டுக் கொள்கிறது.

நம்கட்சித் தலைவரின் புகைப் படத்தை வெளியிட வேண்டாம் நாம்தான் 'வெகுஜனப் போராட்டங்களை எதிர்ப்பவர்கள். ஆனால் இந்த கம்யூனிஸ்டுகள் கரடியாகக் கத்துகிறார்களே! தொழிலாளர்கள் தொழிலாளர்கள் என்று! அந்தத் தொழிலாளர் தலைவர் அந்தோணிப் பிள்ளையின் படத்தைக் கூடக் காணோம்! சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் —அவரை கூடக் காணவில்லை. 'வெட்டப்பட்ட' தலைவர்களில் முன்னாள் மேயர் செங்கல்வராயனும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த அளவுக்கு 'கத்தரிக்கோல்' வேலையைக் காட்டும் இது களுக்கு தக்க பாடம் புகட்டும் கண்ணியம் நம்மிடம் இருக்கக் கூடாதாம். எழுதுகிறது ஜன சக்தி ஏடு!

இந்த அளவுக்கு காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் படங்களை அந்த ஏடு வெளியிட்டதற்குக் காரணம்கூட 'நேருவின் ரஷ்ய விஜயம்தான்' தான் என்று பேசிக்கொள்கிறார்கள்! அது எப்படியோ தொலையட்டும்.

ஆக எல்லா இடங்களிலும் பொய் மணக்கும் இந்த பொதுவுடமை ஏடு ஏன் இதையெல்லாம் எழுதியது? மற்ற கட்சிப் பத்திரிகைகள்—தேசியப் பத்திரிகைகள்—தினத்தந்தி தவிர—சும்மா இருக்கும்போது — இது மட்டும் ஏன் குதிக்க வேண்டும்? இந் நேரம் தவறு நம்மீது இருந்தால் தேசியப் பத்திரிகைகள் சும்மாவா இருக்கும்? காணுமே ஒரு வார்த்தை தேசியப்பத்திரிகைகளில். ஆக மற்ற பத்திரிகைகள் கூடுமான வரை கண்ணியத்தைப் பின்பற்றியிருக்கும்போது 'ஜனசக்தி' மட்டும் நம்மைத் தாக்குகிற தென்றால் இங்குதான் இருக்கிறது அவர்களது விஷயம் —'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்ற பழமொழி இங்கு உண்மையாகிறது உலகாயுதம் பேசும் தோழர்களால் அவர்களது குற்றத்தை மறைக்க — ஜீவாவின் ஆத்திரத்தை தணிக்க—ஏதாவது எழுதித் தீர்க்க வேண்டுமே என்று எழுதுகோல் எடுத்தார்! அதன் பயன் ஜீவாவை மீண்டும் தாக்கி எழுதியுள்ளார்.

● சர்வ கட்சிக் கூட்டத்தில் சர்வகட்சிக் கொடிகள் கூடாது— எங்கள் கொடி மட்டும்தான் தேவை என்று கூறியதும் ஜீவா!

● சம்மந்தா சம்மந்தமில்லாமல் வடநாட்டு ரத்தத்தையும்— தென்னாட்டு ரத்தத்தையும்— கோவா ரத்தத்துடன் ஒப்பிட்டுப் பேசியதும் ஜீவா !!

● மீண்டும் ஜீவாவின் குற்றத்தை மறைக்க எண்ணி அத் தோழர் எழுதிய கட்டுரைக்குப் பலியானவர் ஜீவா !!

● அன்றைய வெறியாட்டத் துக்கு காரணமே ஜீவா !

என்று மக்கள் மன்றம் பேசுவதை கம்யூனிஸ்டு ஏடு காதுகளுக்குக் கேட்கவில்லை போலும் —அந்த அளவுக்கு பொதுப்பணியில் அவர்களுக்கு கண்களும் பொட்டை; காதுகளும் செவிடு!

இத்தகைய பொய்யும் — புனைசுருட்டும்—புளுகும் பொதுவுடமை வாதிகளின் பொருளாதார வாதத்துக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்ற காரணத்தால் அவர்கள் தங்கள் இதழில் பொழிந்து தள்ளுகிறார்கள் !

கழகத்தின் கடற்கரைக் கண்ணியம் கண்டனர் கம்யூனிஸ்டுகள்—கவலை மிகக் கொண்டனர் கம்யூனிஸ்டுகள்.

ஆகவே இத்தகைய பொய்ப் பிரசாரங்களால் மக்கள் மன்றத்தை ஏமாற்ற மார்க்சிய வாதம் பேசும் கட்சி நினைத்தால் அது வெறும் கனவு என்பதோடு—முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதியை—ஒரு மூடன் கிளம்பி நின்று கொண்டு தன் இரு கைகளால் அதை மறைக்க முயல்வது எவ்வளவுபுத்திசாலித்தனமோ அதை போன்றதுதான் இதுவும் என்பதை மக்கள் மன்றம் உணர்ந்து கொண்டது.

கண்களில் கனல் கக்க, கைகளில் கழகக் கொடி ஏந்தி, கலவரம் சிறிதுமின்றி, கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என்ற மூன்று சொற்களை கேடயமாகக் கொண்டு —'கோவா கொடுமையைக் கண்டித்து—கழகக் காளைகள் அன்று நகர்வலம் வந்த காட்சி நாட்டு மக்களின் எண்ணத்தை நம் பக்கம்தான் ஈர்த்து விட்டது என்பதில் ஒரு துளியும் சந்தேகமில்லை.

—ந. சோ.

சுல்தானா ரசியா தொடர்ச்சி

டுவந்தவள். மக்களால் விரும்பிப் போற்றப்பட்டவள். ஆனால் பிரபுக்களால் வெறுக்கப்பட்டவள். மத குருக்களால் நிராகரிக்கப்பட்டவள். அவர்களின் ஏகபோக மிராசுக்கு கொடிய எதிரியாகத் திகழ்ந்தவள்.

எனவே தான் ஒரு பெண்மணியை அரசியாக்க முதலில் மறுத்தனர் அந்தக் கொலு மண்டபத்தார்! ஆனால், ஆல்டாமிஷிடமிருந்த அர்வம்—அன்பு—(!) அவனுக்கெதிராக எதையும் பேச வைக்கவில்லை!

'இளவரசி ஒரு பெண்! அவளரசாண்டால், அந்தப்'பெண்மை—ஆட்சி'யை மிக பெண்மையுடையதென்றுதான், மக்கள் கருதுவா,'! என்று வேண்டாத ஓர் பிரச்சினையைக் கிளறி விட்டுப் பார்த்தனர் ஆனால், ஆல்டாமிஷ், அதற்கும் ஏமாறவில்லை! குவாலியரை வெற்றி கொள்ளப் போயிருந்தபோது, நாடு, அவளாண்டதால், காடாகிப் போக வில்லையே என்று சுட்டிக் காட்டினான்! மறுமொழி பேசவில்லை—பேச முடியவில்லை-கொலு மண்டபத்தாரால்!

எனவே பெயரளவில், ஒப்புக் கொண்டனர் ஆல்டாமிஷிடம் இளவரசி ரஸியாவையே, சுல்தானாவாக ஆக்குவதாகவும் வாக்களித்திருக்தனர்!! ஆல்டாமிஷும் மகிழ்வோடு உயிர் விட்டான்.

ஆனால் கி. பி. 1536-ல் அவனிறந்த பிறகு அவள் நினைத்தது மட்டும் நடைபெறவில்லை. ஏகபோக மிராசுக்காரர்களின் வாழ்வின் நலமும் வாழ்க்கையின் சுகமும் மதத்தின் பெருமிதமும் இஸ்லாத்தின் கெம்பீரமும் குறைந்து விடும் என்றெண்ணிய அந்தக் கொலுமண்டபத்தார் தமக்குப் பொருத்தமான பொம்மையரச னொருவனையே டெல்லி அரியணைக்கு வாரிசாக்கினர். ரஸியா ஏமாற்றப்பட்டாள். வஞ்சிக்கப் பட்டாள்! (அடுத்த இதழில்)

கோவாவும் -ஜீவாவும்

கண்ணியம் கண்டனர் - கவலைமிகக் கொண்டனர்

கோவா கொடுமையைக்கண்டிப்பதற்காக 18—8—55 அன்று சென்னையில் நடைபெற்ற கடையடைப்பும் — கண்டன ஊர்வலமும் — சர்வகட்சி கூட்டமும் தோழர்கள் அறிந்ததே!

அம்மாபெரும் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் தி. மு. க.வின் பங்கு என்ன என்பதை ஏகஇந்தியாக்காரர்கள் அறியாவிட்டாலும் — அறிய மறுத்தாலும் சென்னை நகரம் அறிந்தது. அகமகிழ்வு கொண்டது.

அன்றைய ஊர்வலத்தில் சுமார் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தி. மு. கழக கொடிகளைத் தாங்கிக் கொண்டு ஏராளமான கழகக் காளையர் அணி வகுத்து வர— மற்ற அமைப்புகளான தொழிற்சங்கம் சோஷலிஸ்ட், ஜனசங்கம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் தமிழரசுக்கழகம், ஆகியவற்றின் தோழர்களும் தத்தமது கொடிகளுடன் ஊர்வலத்தில்கலந்துகொண்டனர்

ஆக ஊர்வலத்தில் முக்கால் பங்குக்குமேல் தி. மு. கழகத் தோழர்களே நிரம்பி யிருந்தனர் எனில் மிகையாகாது.

நிற்க: அஃதே போன்று கூட்டத்தில் கலந்து கொண்ட கழகக் காளையரின் எண்ணிக்கையைவிவரிப்பதெனில் ஏடு இடங்கொள்ளாது.

இத்தகைய சீறும் சிறப்புடனும் சர்வ கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பித்த நமது கழகத்தின் புகழைக் குறைக்க எண்ணி இறுதியாக அதிகப்படுத்தியிருக்கிறார்கள் 'ஏக இந்தியா' ஏஜெண்டுகள்.

*

சர்வ கட்சிக் கூட்டத்திற்கென ஏற்படுத்தப் பட்டிருந்த பந்தலைச் சுற்றி காங்கிரஸ் வளைவும், ஒரு பக்கம் கம்யூனிஸ்ட் கொடியும் பறந்து கொண்டிருந்தன. கழகத் தோழர்கள் சர்வகட்சி கூட்டமாகையால் எல்லா கொடிகளும் ஏற்றப்படல் வேண்டும் என்று வேண்டினர். ஆனால் ஜீவா(னந்தம்) அவர்கள் எந்தக் கொடியும் கூடாது, எங்கள் கொடிதான் பறக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பேசினார். உடனே தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத்தினரை நோக்கி அமைதியாய் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். உடனே கட்டுப்பாட்டில் மிகுந்த நம் தோழர்கள் என். வி. என். அவர்கள் பேச்சுக்குக் கட்டுப்பட்டு கொடிகளை மணற்பரப்பில் சொருகி வைத்து அமர்ந்தனர்.

கடற்கரையில் திரண்டிருந்தமக்கள்கூட்டத்துடன்போட்டிபோட்டுக் கொண்டு, ஆர்த்தெழும் அலைகளை அலைந்து அலைந்து அடக்க நினைத்தன நம்இருவண்ணக்கொடிகள். இதைக்காண 'சேவா உணர்ச்சி கொண்ட கோவா சிங்கம்' ஜீவாவுக்கு பொறுக்கவில்லை. உடனே அருகே யிருந்த கொடிகளை அப்புறப்படுத்தும்படி கூறினார். ஆத்திரமடைந்த நம் கழகக் காளைகள் மேடைமீது ஏறி பந்தலின் மீது கொடியை நாட்ட முயன்றனர், உடனே மற்ற கட்சித்தோழர்களும் மேடைமீது ஏறினர். பந்தலும் சரிந்தது—சிறிது நேரம் கூட்டத்தில் குழப்பம்.

உடனே குழப்பத்தை அடக்க நினைத்த தி. மு. க. தலைவர்கள் நம் தோழர்களை தனியாக வந்து சேருமாறு கேட்டுக்கொண்டனர். பின்னர் நம் கழகதோழர்களுக்கு என். வி.என். அவர்கள் ஆறுதல் கூறி எந்தவிதமான ஆத்திரமும் கொள்ளாமல் அமைதியா யிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டும் மேடைமீதிருந்த மற்ற கட்சித் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியும் கூட்டத்தில் கலந்து கொண்டார். என். வி. என். அவர்கள் பேசுவதற்கு முன்னர் ஜீவா உட்பட பலர் பேசினர். அப்போதெல்லாம் நம் தோழர்கள் எந்தவித அமைதிக் குறைவையும் ஏற்படுத்தவில்லை. பின் கூட்டத்தில் கூடியிருந்த பெரும்பாலான மக்கள் —முக்கால் பாகத்துக்குமேல் துணைப்பொதுச் செயலாளர் என், வி. என். அவர்கள் பேசி முடித்ததும் கலைந்து சென்றனர். இதைப்போன்ற சம்பவங்கள் கம்யூனிஸ்டு நண்பர்களுக்குப் புதிதல்ல, அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகின்ற சர்வ கட்சி கூட்டங்களில் அடிக்கடி இத்தகைய அரிய வாய்ப்புகளை அவர்கள் சந்தித்திருக்கிறார்கள். கூட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கூடினார்கள் என்றால் முக்கால்வாசிக்கு மேல் நம்முடைய தோழர்கள்தான், சுருங்கக் கூறி விளங்க வைக்கவேண்டுமானால் அன்றைய ஊர்வலமும் கூட்டமும், சென்னை மாவட்ட தி. மு, கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டதோ என ஐயுறும் வண்ணம் அமைந்திருந்தது!

*

ஐயகோ! என்னவென்று சொல்வது! இவ்வளவு பெரிய உண்மைகளை மிக மிக சாமர்த்தியமாக மறைக்க அல்ல--மறுக்க எண்ணுகிறார் ஒருகம்யூனிஸ்டு பிரகஸ்பதி!

21—8—55 ஜனசக்தி இதழில் "காற்றில் பறந்தது அவர்களது கண்ணியம்" என்ற தலைப்பில் " ஈட்டி முனை " பகுதியில் ஒரு தோழர் ஏதேதோ அங்கலாய்த்துள்ளார்!

"சென்னையின் சரித்திரமே இதுவரை கண்டிராத பரிபூரண ஹர்த்தால் நடத்திய பின் மாலையில் **இரண்டு லட்சம் மக்கள்** திரண்டனர் சென்னை ஹைக் கோர்ட் கடற்கரையில், எதற்காக திராவிட நாட்டுப் பிரிவினைக்காகவா? அல்ல. தி. மு. கவின் கற்பனையிலுள்ள ஆரியர்களை விரட்டுவதற்காகவா? அல்ல. மாற்றுக்கட்சிகளைத் திட்டுவதற்காகவா? இல்லவே இல்லை. ஜாதிமத, இன, கட்சி வேற்றுமை பாராட்டாது தேச விடுதலைப் பணியில் உயிர் நீத்த கோவா வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்காகக் குழுமினர்,"

இப்படி ஆரம்பமாகிறது தாக்குதல்கள், முதலில் ஒரு வார்த்தை! திராவிடநாட்டுப் பிரிவினைக்காக இரண்டு லட்சம் மக்கள் கூடி கம்யூனிஸ்டு தோழர் பார்க்கவில்லை போலும்—வருந்துகிறோம் இது வரை பார்க்கத் தவறிய அந்த பொதுவுடமைத் தோழருக்கு—திருச்சிமாநகரில்—கட்டணம் செலுத்தி வந்து பிரிவினை கீதம் இசைக்கப் போகும் பெரிய வாய்ப்பு—காட்சி அண்மையில் கிடைக்கஇருக்கிறது. அதைநழுவ விடவேண்டாம் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த கம்யூனிஸ்டுத் தோழர், இவ்வளவு கார சாரமாக ஜீவாவைத் தாக்குவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

சர்வ கட்சிக் கூட்டம் ஆரம்பமானதுமே முதல் பேச்சாளர் ஜீவாதான். அவர் பேசுகிறார் 'கோவாவில் சிந்தப்படுவது, வடநாட்டுரத்தம்--தென்னாட்டுரத்தம் என்று சிலர் கூறுவார்கள்—அது தவறு கோவாவில் சிந்தப்படுவது இந்திய ரத்தம்' என்று. (பலத்த கரகோஷம் என்று'ஜனசக்தியில்' போடப்பட்டிருக்கிறது.)

கோவா போராட்டத்திற்கும் வடநாடு, தென்னாடு, ரத்தத்திற்கும் என்ன சம்மந்தம்? மற்ற பேச்சாளர்களுக்கு பதிலளிக்கும் முறையில் பேசினாரா யென்றால் அதுவும் இல்லை ஜீவாதான் முதல் பேச்சாளர். நம்மால் திருப்பிக் கேட்க முடியாதா? கூடியிருக்கின்ற இரண்டு லட்சம் வெகுஜன மக்கள் வடநாடு தென்னாடுப் பிரச்னைக்காகவா; கூடினார்கள் என்று இப்படிதன்னிடம் குற்றத்தைவைத்துக் கொண்டே நம்மை நோக்கி கத்துகிறது அந்த ஏடு!

அடுத்தபடியாக மேடை மீது எந்தக் கட்சிக் கொடியும் பறக்கவில்லை என்று அது எழுதுகிறது. உண்மையிலேயேஅன்றுபந்தலின் மீதுபறந்த கம்யூனிஸ்டு கொடிக்கு பேசும் சக்தியிருந்திருக்குமானால் இந்தத் தோழரை அதட்டி கேட்டிருக்குமோ என்னவோ— நமக்குத் தெரியாது!

'வந்திருந்த இரண்டு லட்சம் பேர்களில் இரண்டாயிரம் பேர் தான் அந்தக் கோஷ்டியில் சென்றிருப்பர்' என்று எழுதுகிறது அந்த ஏடு. என்ன தலைகீழ் சர்வ தேசப் பாடம்! வந்திருந்த கூட்டத்தில் 2000 பேரைத் தவிர இரண்டு லட்சம் பேர்கள் அந்தக் கோஷ்டியில் சென்றிருப்பர் என்று எழுதுவதற்கு பதில் இப்படியா எழுதுவது? இவர்கள் சர்வகட்சிக் கூட்டம் போட்டால் தானே இரண்டு லட்சம் மக்கள் கூட்டத்தைப் பார்க்க முடியும்? அந்தச் சர்வகட்சிக் கூட்டத்தில் தி. மு. க. கலந்து கொள்கிறது என்றால்தான் அந்த இரண்டு லட்சமும்!

தமிழ் நாட்டில் நேருவுக்கு அடுத்தபடியாக கூட்டம் வருவது அறிஞர் அண்ணாவுக்குத்தான் என்ற நிலையை மாற்றி நேருவை விடவும் அண்ணாவிற்கு கூட்டம் வருகிறது என்ற வரலாற்றுத் திருப்பத்தை உண்டாக்கிக் காட்டியவர்கள் நாம் என்பதை நாட்டிலுள்ள நானாவித கட்சிகளும் அறிந்திருக்கின்றன. இந்த லட்சணத்தில் அந்தக் கூட்டத்தில் நம்முடைய தோழர்கள் 2000 பேர் தான் என்று எழுதுகிறதே! இதை நினைக்குந்தோறும் அந்தப் பேர்வழியின் மனதில்குடிகொண்டுள்ள அழுக்காறு தெரிகிறதல்லவா?

கம்யூனிஸ்டு கட்சி நடத்திக் காட்டிய கடற்கரை கூட்டத்தில் என்றைக்கு ஒரு லட்சம் பேர் (இதுபோதும்) திரண்டிருக்கின்றனர்! காட்டுங்கள் கணக்கை, "நமக்கு கடற்கரையில் தானே சாதாரண பொதுக் கூட்டம் முதல் ஆண்டு விழா வரை நடத்துவதற்கு இடம் கொள்ளும்!"

ஆகவே இந்தபுளுகை நாடு நம்பாது—நாமும் நம்பமாட்டோம்.

'ஒவ்வொரு கட்சித்தலைவராகப் பேச அழைத்தார் தலைமை வகித்த என். அண்ணாமலைப் பிள்ளை, ஆனால் தங்கள் தலைவர் என்.வி. நடராசனை உடனே பேச வைக்க வேண்டும் என்று கூட்டத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்த இந்த கோஷ்டி மீண்டும் கலவரம் செய்ய ஆரம்பித்தது சிறிது நேரம் கழித்து என்.வி. நடராசன் அவர்கள் பேசி முடிந்ததும் அவரும் அங்கு வந்திருந்த தி.மு.க. கோஷ்டியும்(சுமார் இரண்டாயிரம் பேர் இருக்கும்) தங்களது கொடிகளுடன் கூட்டத்தின் குறுக்கே புகுந்து வெளியேறினர் என்று \ வடிகட்டிய புளுகை அளக்கிறார் அந்த கம்யூனிஸ்ட்!

கூட்டத்தில் இருந்த நம் தோழர்கள் அன்றுகாட்டிய சகிப்புத் தன்மை அளவுக்கு மீறிய தொன்றாகும்!

முதன் முதலில் தலைமை வகித்த அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் நிலவுலாவிய நீர் மலிவேணியன்' என்று கடவுள் வணக்கம் பாடிய போதும் நம்முடைய தோழர்கள் காட்டிய சகிப்புத்தன்மை இது சர்வகட்சிக் கூட்டம் என்ற காரணத்தால் தான்.

வடநாட்டு ரத்தம் தென்னாட்டு ரத்தம்—இந்தியரத்தம் ஆக இம் மூன்று ரத்தங்களையும் கோவா ரத்தத்துடன் ஜீவா ஒப்பிட்டுப் பேசும் போதும் நம்முடைய தோழர்கள்!காட்டிய சகிப்புத் தன்மை—சர்வகட்சிக் கூட்டம்.என்ற காரணத்தால் தான்.

நிலைமை இவ்வாறிருக்க என். வி. நடராசனை பேசும்படி கலவரம் செய்ததாகக் கூறுவது கற்பனைக்குக் கூட பொருந்தாத போது கம்யூனிஸத்துக்கு பொருந்துமா என்பது "கார்ல்மார்க்ஸுக்கே வெளிச்சம்," நம் நா

8-ம் பக்கம்

பஞ்சாபில் மூன்று நாட்கள் தொடர்ச்சி

பரீட்சையில் அப்போதுதான் பாஸ் பண்ணியிருந்தார்கள். 'தத்தகா பித்தகா'வென ஒருவாறு அவர்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரிந்ததால் அவர்களுடன் பேசிக்கொண்டே கோதுமை செழிப்பாக விளைந்து காற்றில் கதிர் ஆடிக்கொண்டிருந்த வயலைப் பார்த்தேன் கம் பக்கத்து செக்கை போன்று மாடுகள் பூட்டப்பட்டு, அவை சுற்றிச்சுற்றிவர, அரைத்தமாவு தனியாக வந்து விழும்படியான (கரும்பு ஆலை போன்ற) கோதுமை மாவு ஆலையைக் கண்டேன்.

அங்கே ஒரு பக்கம் கரும்பு பிழிந்துக் கொண்டிருந்ததையுங் கண்டேன்.

வயலிலோ மற்ற இடங்களிலோ வேலை செய்பவர்கள் அத்தனை பேரும் 'ஹுக்கா' உறிஞ்சிகொண்டே வேலை செய்கிறார்கள். ஹுக்கா கூடுகள் ஒவ்வொருவர் பக்கத்திலேயும் இருக்கின்றன. எப்போதும் புகைத்துக் கொண்டேயிருக்கின்றனர். குளிரைச் சமாளிக்க வேண்டுமே!

எல்லோரும் சாதாரணமாகக் கம்பளி கோட், காதைச் சேர்த்து கட்டினாற்போல தலைப்பாகையோடுதான் வேலை செய்கிறார்கள்.

நம் பக்கம் ஏற்றம், கவலை ஆகிய சாதனங்களைக் கொண்டு வயல்களுக்கு நீர் பாயச்சுகிறோம்.

அங்கே, எங்கேயும் பெர்ஷியன் வீல் (Persian Wheel) பாரசிகச் சக்கர முறையைக் கொண்டுதான் நீர்பாய்ச்சல் நடக்கிறது. இது எப்படி எனின், கேணியின் அடியில், தண்ணீரில் ஒரு சக்கரம் தரைக்கு மேலே ஒரு சக்கரம். இவ்விரு சக்கரங்களையும் இயக்க 'ஆயில் என்சின்' பலர் உபயோகப்படுத்துகின்றனர், எஞ்சியோர் மாடுகளின் சக்திகொண்டே. அவை செக்கைப் போல் சுற்றிவர இரு சக்கரங்களும் சுற்றுகின்றன. இவ்விரு சக்கரங்களையும் தடித்த அதற்கென்று உறுதியாக அமைந்த 'பெல்டை'ப் போட்டு மாட்டுகிறார்கள், அப்பெல்டில் மரக்கால்கள் மாதிரி இரண்டடி அல்லது ஒரு கஜத்திற்கு ஒன்றாக பதிய வைக்கிறார்கள். மரக்கால்களின் எண்ணிக்கை நீர் மட்டத்தையும், தரை மட்டத்தையும் பொறுத்திருக்கிறது. சக்கரங்கள் சுற்ற பெல்டும் அதனோடே சுற்றுகிறது. நீரில் போகும்போது மரக்கால்கள் தண்ணீரை மொண்டுக் கொள்கின்றன. மொண்ட நீரை ஒன்றன் பின் ஒன்றாக வெளியில் தொடர்ந்து ஊற்றிக் கொண்டே இருக்கிறது. சக்கரங்கள் சுற்றுவது நின்றால்தான் நீர்ப்பாய்ச்சல் நிற்கும். இதைப்பற்றி விளக்குவதையும் இங்கே நிறுத்துவோம்.

இதற்குள்ளாக மனம் போன போக்கில் பாக்கெட் பாக்கெட்டாக சிகரெட்டுகளை ஊதித்தீர்த்து விட்டு சந்த்ராம் இல்லம் திரும்பினோம்.

நிர்...வே...டம்! ஹல்லோ! ...... இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்!

புரானிபாஸி பார்த்தேன்!

தனியாகவா!

இல்லை; தேவும், அருணும், உடன்வந்து உதவினார்கள்.

சரி ரொம்ப களைப்புற்றுக் காண்கிறாய். கொஞ்சம் இக்கட்டிலில் படு, சற்று தூங்கி எழுந்திரு, சாயந்திரமாக 'வாக்கிங்' போகலாம் என்றார்.

இல்லை இல்லை! இன்னும் நான் உங்களிடம் பேசவேண்டியது அநேகம் இருக்கிறது. அதைப் பேசிவிட்டால்தான் நான் நாளை ஊருக்குப் புறப்பட முடியுமென்றேன்.

நல்லா சொன்னே. நாளைக்கா ஊருக்கு? அது ஒன்றும் முடியாது! ஒரு வாரமாவது என்னிடம் இருந்தே ஆகவேண்டும்! ஒன்றும் பேசாது படு! கைவிரல்களெல்லாம் உதர்கின்றன. உடம்பு நடுக்க முற்று சில்லென்று இருக்கிறது. படு! படு! என்று படுக்கவைத்து 'குல்ட்'—நம்பக்கத்திலுள்ள பெட்—மெத்தை—முறப்பாயில்லாது—ரொம்ப துவண்டு போனாற்போல இருப்பது—அந்த 'குல்ட்'டைப் போட்டு போர்த்திவிட்டார். குளிருக்கு என்ன அடக்கமாயிருந்தது அக்''குல்ட்''. படுத்தேன், ஆழ்ந்த தூக்கம்

நிர்...வே...டம் ... ஜீ...தூத்' என்றார்கள் சுந்தர்பாய் அம்மாள்.

மிதமான சூடு. சுவையான அப்பட்ட பால். நன்றாக இருந்தது. குடித்தேன். தூக்கங் கலைந்தேன். முகம் துடைத்து வாக்கிங்கு தயாரானேன்.

காந்தியடிகள் தண்டி யாத்திரைக்கு நீண்ட கைத்தடி கொண்டாரே, அதைப்போன்று இரண்டு முனைகளிலேயும் வெள்ளிப்பூண் போட்ட நீண்ட உறுதியான நாலடி கைத்தடியோடு சுந்தர்பாய் சகிதம் புறப்பட்டார். உடன் உரையாடிச் சென்றேன். அதிவேகமாக பழக்கத்தால் அவர்களிருவரும் நடக்கிறார்கள். கிழவனும் கிழவியும். நான்! குமரன், அவர்கள் நடையை விடாது பிடிக்க ஓடுகிறேன்.. ஓடுகிறேன்.

மெள்ள நடங்களேன் என்றுகூட வெட்கங்கெட்டும் கூறிவிட்டேன்.

சுந்தர்பாய் அம்மாள் என்னை கைபிடித்து நிறுத்திக்கொண்டு மெள்ள நடந்து வந்தார். சந்த்ராமைப் போகச் சொல்லிவிட்டார்; பழக்கமாகச் செல்லவேண்டிய இரண்டு மைல் தூரம் நடந்து திரும்பி வரும்போது எங்களைப் பாதிவழியில் சந்தித்தார். பிறகு மூவருவமாக வீடு வந்து சேர்ந்தோம்..

பெரியார் நடத்திய பழைய ஆங்கில வார ஏடான 'ரிவோல்ட்'டைப் புரட்டி சந்த்ராமைப் பற்றியும். Self Respect Movement நமது சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் உள்ள பகுதிகளை ஆங்கில சொற்பொழிவு நிகழ்த்துகிற முறையில் வாசித்துக் காட்டினேன்.

ஒன்று உணர்ந்தேன், தென்னாட்டாரின் ஆங்கில உச்சரிப்பைக் கண்டு வடநாடு வாய் பிளந்து வியந்துவிடுகிறது. இப்படிக் கூறுவது எவ்வாற்றானும் மிகையன்று. பலருக்கும் இவ்வுண்மை தெரிந்ததே;

இரவு சாப்பாடு, இரண்டு கோதுமை ரொட்டி. ஒரு கிண்ணம் பாற்சோறு! முடிந்தது

சந்த்ராம் வீட்டிற்கு அப்போதுதான், ஹோஷியார்பூரில் நாள் பூராவுமாக வாணிப வேலையைக் கவனித்துவிட்டு அங்கு வந்து சேர்ந்தார் ஹேத்ராம் என்பார் ஹேத்ராம், சந்த்ராமின் இரண்டாவது அண்ணனை காலஞ் சென்ற லட்சுமணதாஸ் B A. P.E S. அக்காலத்து Dy. Inspector of Schools என்பாரின் மகனர். அவர் எனது வருகையைக் கண்டு மகிழ்ந்து அவர் வீட்டில் படுக்கைக்காக அழைத்துச் சென்றார், பிற அடுத்து......

★

பாலைவன ரோஜா கதாடர்ச்சி

விட்டது! கற்கண்டே...இன்பத்துக்கு நேற்று ஏன் வேலி போட்டாய்? காரணம் புரியவில்லையே அழகரசி! இன்றைய பொழுதையும் நேற்றைய இரவாக்கி விடாதே! ஆற்றோரம் காத்திருப்பேன் ஆடி வரும் பொன் விளக்கே வந்துவிடு.

—மூர்—

[கடிதத்தை மடித்துக்கொண்டே அகிலாண்டத்தின் பக்கந் திரும்புகிறான் பலவேசம்)

அகி : என்ன தம்பி! என்னென்மோ சொல்றியே... இதெல்லாம் ...!

பல ; மாடியிலே யிருக்காங்களே மகாராணி அவர்களைக் கேளு—இதுக்கு விளக்கஞ் சொல்லுவாங்க.

அகி : தம்பி 'மூர்'னு கடைசிலே படிச்சியே யாரப்பா அது?... சாயபு பேரு மாதிரில்லயிருக்கு!

பல : சாயபூவுமில்லே—ஜாதிப் பூவுமில்லே.... எல்லாம் நம்ம பக்கத்துவீட்டுப் படிச்சவன் செய்யுற வேலே. நம்ம மொகத்துலேயே கரியைப் பூசப் பார்க்கிறான். அவனைச் சொல்லி என்ன?...நம்ம வீட்டுக்குள்ளேயே பாம்பு இருக்கும்போது—மகுடி ஊதுறான் அவன்.

அகி: மூர்த்தியா இப்படி நடந்துக்குது. ரொம்ப நல்லவனுச்சே! ராஜமா இப்படி நடந்துக்கிருள்னு நினைக்க மறந்துட்டியேக்கா. அக்கா உனக்கு உலகமே தெரியாது. ராஜம் பல்லைக் காட்டினு அவன் அழுதுகிட்டா நிற்பான். இவங்க ஆற்றோரக் காதலெல்லாம் எனக்குத் தெரியுமக்கா தெரியும். இந்தப் பலவேசம் பைத்தியமில்லே! வட்ட நிலவாம்—வைரக் கட்டியாம், புது மலராம், பொன் விளக்காம்......பாரக்கா பார் உன் ராஜத்துக்கு எத்தனை புகழ் மாலைகள்......அப்படியே பூரிச்சு மயக்கம் போட்றுதே...!

அகி: தம்பி நீயே இப்படி...

பல: இப்படித் தெரிஞ்சிருந்துதா நானே முன்வந்தேன்...... அவமானத்தை போக்குறதுக்கு. அது உங்களுக்கு எங்கே தெரிஞ்சுச்சு. ஜாடையாச் சொன்னேன். பிகு பண்ணுனீங்க. இவ்வளவு கஷ்டமும் எனக்கெதுக்கு? உங்க சொத்துக்காகவா பார்த்துகிட்டு யிருக்கேன். சொந்தம்போய்விடக் கூடாதேன்னு கழுத்தை கொடுத்துக்கிட்டு இருக்கிறேன், இப்ப விஷயம் எவ்வளவோ தூரத்துக்குப் போயிடுச்சு! இனி எனக்கெதுக்கு இந்த அவமானம் ஊர் சிரிக்கும்!

அகி: தம்பி! காரியம் இன்னும் மிஞ்சிடலேப்பா. ராஜத்துக்கு கட்டுப்பாடேப் போட்டுட்டா எல்லாம் சரியாயிடும். அப்புறம் மாமாவிடம் சொல்லி...

பல: இந்த ஓடுகாலியை என் தலையிலே கட்டிடுறேன்னு சொல்லுறே! அதுதான் முடியாது. மூக்கறுக்க வேறு ஆளைப்பாருங்க.

[கடிதத்தை மடித்து சட்டைபையில் வைத்துக் கொண்டே வெளியே போக முயற்சிக்கிறான் பலவேசம். கடிதத்தைத் தன்னிடமே தந்து விடும்படி அகிலாண்டம் கேட்கிறாள். பலவேசமோ...?]

பல : தரமாட்டேன்—திகம்பரரின் அருமை மகளின் யோக்யதையை எடை போட்டுக் காட்டும் இந்தக் கடிதத்தை நான் தரவே மாட்டேன். அது என்னிடமேயிருக்கட்டும். காலம் வரும்போது பயன் படுத்துகிறேன் அப்போது பாரக்கா உன் தம்பியின் திறமையை...ஹா—ஹா—ஹா!

(சிரித்துக்கொண்டே வெளியேறுகிறான்)

(அடுத்த வாரம்)

●

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

2

காட்சி 3.

இடம் : திகம்பரர் மாளிகை

நிலைமை : சாய்வுப் பலகையிலே சாய்ந்தபடியே செய்தித் தாளை புரட்டிக் கொண்டிருக்கிறார் திகம்பரர். காபி டம்ளருங் கையுமாக வந்த அகிலாண்டம் தினகரரிடம் அவள் தயாரித்த 'அமிர்த'த்தைத் தந்துவிட்டு சலவைக்கல் தூணிலே சாய்கி கிருள்.

அகிலாண்டம் : நேற்றுக் கூட தம்பி வந்து போனானுங்க!

திகம்பரர் : யாரு பலவேசமா அடடே! பேப்பர்லே விஷயத் தையே காணோமே!

அகி : போங்க கேலிதான் உங்களுக்கு! பேப்பர்லே பேர் வர வேண்டிய அளவிலேயா தம்பி யிருக்கான்,

திக : பேர் மட்டும் என்னடி— போட்டோவே போட்டுடுவானுக இன்னுங் கொஞ்ச நாளையிலே

அகி: விளையாடுறீங்க......!

திக: தம்பி பலவேசம் இப்ப ஆபத்தோடேதான் விளையாடிக் கிட்டிருக்கான். நேற்று வந்தானே சொல்லி வச்சியா?

அகி: அவன்தானுங்க ஏதே தோ சொல்லீட்டு......கடைசிலே கலியாணத்தைப் பத்தி கண்டிப் பாவுஞ் சொல்லிட்டு வேகமாப் போயிட்டான்.

திகம்பரர் : கலியாணம்னு செய் துக் கட்டுமே. அதுக்கு நம்மை யும் முன்னாலே இழுத்து வைத்து மூக்கறுக்கவா? கழுதைக்குக் கலி யாணம். நடத்திக்கட்டுமே!

அகி : என்னங்க கழுதை கிழு தைன்னு தம்பி காதுலே விழுந் துட்டா!

திக : அந்தத் தம்பி உனக்குத் தங்கக்கம்பி தாண்டி........ஆனா, அவன் 'யோகம்' இரும்புக் கம்பி யையல்லவா பிடிக்கச் சொல்லுது வேண்டாம்னு நீ கதறுனாலும் வெள்ளிக் காப்பைப் போடவர்ர வன் விட்டுடவா போறான்.

அகி : வெள்ளிக் காப்பு, இரும் புக் கம்பி......இதெல்லாம் என் னங்க........!

திக : சர்க்காரின் பரிசடி--உன் தம்பிக்கு, சர்க்காருக்குப் பிடிச்ச வருல்ல அவரு. சும்மாவிடு வாங் களா...குடிச்சிட்டு கூத்தடிச்சா. பூக்காட்டிலே எல்லோருமா நம் மைப்போல பார்த்துட்டு அவன் ஆட்டத்தை ரசிச்சிட்டிருப்பாங்க! பக்கத்து போலீஸீக்கு தகவல் போயிடுச்சு! இனி யோக்கியமா லே நீட்டினா தப்பிக்கிட்டான். இல்லேன்னா...இரும்புக் கம்பி— வெள்ளிக்காப்பு......

அகி : புது மாடு பாயத்தானுங் களே செய்யும்,

திக: என்னடி நான் கழுதைன்னு சொன்னதுக்கு துள்ளிக் குதிச் சியே இப்ப நீயே மாடு கீடுன்னு.

அகி : சே! சே! அதுக்கில் லேங்க...தம்பி வயசுக்கு துடியாத் தானுங்களே யிருக்கும். குடிகா ரன், கூத்தடிக்கிறவன்னு நாமளே சொல்லிக்கிட்டிருந்தா? நமக்குத்தானே கேவலம்! மதுரை வீரன் கோயிலிலேயிருந்த சாரா யத்தைத் தெரியாமே குடிச்சிட்டு போதையாக் கிடந்தான் அதுவும் அவனா வேணும்னு செய்தான் வீரன் செய்த வேலே...இளநீர்னு சொல்லி வீரன் கொடுத்தானும் இவனும் வாங்கிக் குடிச்சிட்டு

மா. தங்கவேலர்

மயங்கிக்கிடந்தான், இதை ஒரு சாக்காக்கிக்கிட்டு என்னென் னமோ வசை பாடுறீங்களே! பேசாமே நம்ம ராஜத்தை அவ னுக்குக் கட்டி வச்சிடுங்க. பின் னாலே பாருங்க எல்லாம் சரியாப் போயிடும்.

திக : கொத்தவர்ர பாம்புக்கு முன்னாலே முகத்தைக் காட்டி கொஞ்சிப் பேசுன்னு சொல்றே! யாரோ ஏமாளிப் பாப்பான் உச் சிக் குடுமியிலேயே பட்டாசைக் கட்டி வெடி வச்சிச்கிட்டானும். அந்தக் கதை போலயிருக்கு நீ சொல்றது. ராஜம் எங்கே? அவ னெங்கே?...நம்ம ராஜத்தின் நிழ லிலே நிற்கிறதுக்குக்கூட உன் தம்பிக்கு யோக்யதை தகுதியில் லையே...

அகி: நிழலிலே மட்டுமென்ன ...மண அறையிலேகூட நிற்கிற துக்குக்கு அவனுக்கு யோக்யதை யிருக்குதுன்னு அடிச்சுச் சொல் றேன்!

பாரதிதாசனின் எதிர்பாராத முத்தமும் கையுமாக நுழைந்த ராஜம் மாடிப்படிகளில் ஏறிக் கொண்டே......

ரா : அம்மா! அப்பாவை அடிச் சுச் சொல்லவும் வேணும், கிள்ளிச் சொல்லவும் வேணும். உங்களுக்கு ஓங்க தம்பி வேணும்னா இன் னொரு பெண்ணு பெத்துக் கொடு ங்க நான் தயாரில்லே.

ராஜம் சொல்லியதைக் கேட்டு எல்லோருமே சிரிக்கின்றனர். அந்தச் சிரிப்பின் அடித்தளத் திலே தீர்க்கமுடியாத வேதனை தேங்கிக் கிடப்பதை அகி லாண்டம் அறிந்தாள்.

*

காட்சி 4.

இடம் : வள்ளியின் வீடு

நிலைமை : வள்ளி...அழகுக் கோயி லின் திருவிளக்கு! சிலோனிலே பிறந்து சிங்கப்பூரிலே வளர்ந்து மலேயா பர்மாவெல்லாம் அலை ந்து திரிந்து வாழும் கலையை கற்றுக் கொண்டு பூர்வீக ஊரான பூக்காட்டுக்கு வந்து தங்கி யிருந்தாள் வள்ளி. வீரன் அவளுக்கு ஏதோ ஒரு வகையில் உறவு கொண்டாடி னான். மயில் போல ஆடி மன தைக் கவரும் நாட்டியத்திலே தேர்ச்சி யடைந்திருந்தாள் வள்ளி. கிராமிய தெருக்கூத் துக்கிடையே வள்ளியின் பர் மிய நடனத்துக்கு நல்ல வர வேற்பிருந்தது, இந்த முறை யிலே வள்ளியை அந்த வட்டா ரமே நன்றாக அறிந்திருந்தது, வள்ளிக்கு மேனிதான் பளிங்கு ...உள்ளமோ இருண்டு கிடந் தது. பலவேசம் ஆடும் மயிலின் புகழ் பாடும் ரசிகனாகி யிருந் தான்.]

'காயாத கானகத்தே'...பாடிக் கொண்டே உள்ளே நுழைகிறான் பலவேசம்.

வள் : காயாத கானகம், மேயாத மான், சாயாத கொம்பு...அடே யப்பா முழக்கித் தள்ளிட்டிங் களே......எங்கே இழுவையிலே மூச்சு நின்னு போகுதோன்னு பயந்துட்டேங்க!

பல: இதென்னஇழுவை வள்ளி! செத்த கிட்டப்பா பாடனும் நாம கேட்கணும்......மனுஷன் இழுத் தாருனா

வள்: அது என்ன டப்பாங்க?

பல: டப்பாவாவது, பெருங் காயமாவது...கிட்டப்பா வள்ளி கிட்டப்பா—அவரு பாடினா...?

வள்: அவரு பாடினதிருக்கட் டும், இப்ப நீங்க ஏன் உயிரை விடுறீங்க?

பல: உயிரைவிடல வள்ளி உள் ளத்தைத் திறந்து காட்டுறேன், வேலன் காயாத கானகத்தே பாடி னான்—வள்ளியின் திருமணம் நிச் சயமாச்சு. இந்த வள்ளிக்காக இப்ப நான் பாடுகிறேன்!

வள்: யானையைக் காட்டி பய முறுத்தில்ல அந்தக் கலியாணம் நடந்துச்சு,

பல: உனக்கும் எதுமேலே பய முன்னு சொல்லு நானும்...!

வள்: எனக்கு எதுமேலேயும் பயமில்லே உங்களைக் கண்டால் தான் பயம்.

பல: நல்லவேளே! எங்கே சிங் கம், புலின்னு சொல்லி நம்ம வீரத் தை எடை போட்டுடுறியோன்னு நினைச்சேன். பாவம்! வேலனுக் குத்தான் யானை முகத்தான் வேலை செய்தான். எனக்கு வீரன் தான் துணை!......எங்கே வள்ளி வீரன். வீரா...!

வள்: அது ஒத்திகை நடத்து துங்க...!

பல: தெருக் கூத்துக்கா? அடே இவனும் சாயம் பூசிக்கக் கிளம் பிட்டானா...? டே வீரா!

[வீரனை அழைத்துக் கொண் டே பலவேசம் உள்ளே நுழைகிறான். வீரனோ படுத் துத் தூங்குகிறான்]

பல: என்ன வள்ளி ஒத்திகை யா இது?

வள்: ஆமங்க குளத்து மேட் டிலே நாடகம்...இவருதான் கும்ப கர்ணன்!

[வள்ளியும்--பல வேசமும் சிரிக்கிறார்கள். சிரித்த அழகி யின் கூந்தலிலிருந்த சிவந்த ரோஜாவை எடுத்து இதழ் விரித்து பலவேசம் முகர்கி றான். ஆடும் அழகி — புகழ் பாடும் பக்தனின் பரந்த மார் பிலே சாய்கிறாள். இருவரும் அறையை விட்டு வெளியே அடி எடுத்து வைக்கின்ற னர்.]

*

காட்சி 5

இடம்: திகம்பரர் மாளிகை.

நிலைமை: [ராஜம் மாளிகை மாடியிலிருக்கிறாள். எதிர் வீட்டு 'பேபி' மார்போடு அணைத்த புத்தகத்தோடு மாளி கைக்குள்ளே அடி எத்து வைக் கிறாள். எதிரே வந்த அகிலாண் டம் பேபியிடம் 'சேதி' கேட்கி றாள். ராஜத்திடம் புத்தகத் தைக் கொடுக்க வேண்டு மென்று பேபி தடுமாறிக் கொண்டே கூறுகிறாள். பேபி யின் குரலிலிருந்த நடுக்கமும், கண்களிலிருந்த படபடப்பும் சந்தேகத்தைத் தந்தது அகி லாண்டத்துக்கு. தானே ராஜத்தை அழைத்துக் கொடுத்து விடுவதாகக் கூறி பேபியிடமிருந்து புத்தகத்தை வாங்கிக் கொள்கிறாள் அகி லாண்டம். குழப்பமடைந்த பேபி ஓடி விடுகிறாள். அகி லாண்டம் புத்தகத்தை விரித்த தும் உள்ளேயிருந்த கடிதத் துண்டு கீழே விழுகிறது. குனிந்து எடுக்கிறாள். எதிரே பலவேசம் வந்து நிற்கிறான்! அக்காவின் கையிலிருந்த கடி தத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கிறான்.]

(பலவேசம் படிக்கும் கடிதம்)

"என் இதயச் சோலையில் பூத் துக் கிடக்கும் புதுமலரே!

முழு இரவும் — முழுப்பகலும் ஓடி முடிந்தது...நேற்று! ஆனால் உன்னைத்தான் காண வில்லே— காத்திருத்தேன். ஆற்றோரத்துப் பொன் மணலிலே அலைந்து திரிந் தேன். வானத்தைப் பார்த்தேன். நீல வானத்துக்குத்தங்க முலாம் பூசிக்கொண்டிருந்தது அழகுநிலா! அந்த அழகெல்லாம் என்னைக் கவருமா அன்பே! வட்ட நிலா வாகட்டும், வைரக்கட்டி யாகட் டும் உன்மேனியின்முன்னேஅவை களெல்லாம் மதிப்பிழந்து தானே போய்விடும்.

இரவு வேதனையோடு தேய்ந்து

12-ம் பக்கம்

திராவிடப் பூங்கா

ஐயப்பா!

நீ ஊருக்கு வந்த உமது தொல்லே சகிக்க முடியவில்லையே. சபரிமலே மூலேயில் குந்தாணியிட்டுக் குந்திக் கிடந்தாய். எங்கே தன்னே மறந்தும் எழுந்தோடி வம்பை விலேக்கு வாங்கிக்கொள்ளப் போகிறேமோ எனக்கருதி, இரு கால்களேயும் கட்டிப்போட்டுக் கொண்டு, மலேயைவிட்டு இறங்காமல் பதுங்கிக் கிடந்தாய். அப்படிப் பயந்து பதுங்கி வாழ்தலேயும் பொருத விரோதிகள் உம்மை விட்டார்களில்லே. அதுதான் ஏனென்று எமக்கும் புரிந்து தொலேயவில்லே. படுபாவிகள் உமது இருப்பிடத்திற்கே தீ வைத்துச் சுட்டு சாம்பலாக்கினர்களே. நல்லவேளே உமது உடம்பு கல்லுபோலவும் இரும்பு போலவும் காணப்பட்டதால் தீவிபத்துகளினின்று உயிரோடு தப்பினுய். நீ நீண்டாவண்ணம் கல்லாய் இரும்பாய் உடம்பைப் பெற்றெடுத்த சிற்பிப் பெற்றேர்களே நெஞ்சாரப் போற்றி! போற்றி!! என்று போற்றி யிருப்பாயல்லவா! காலந் தாழ்ந்துவிட்ட போதிலும், யானும் இப்போதாவது நீவிர் தீ விபத்தினின்று உயிரோடு தப்பியமைக்காக உம்மைப் பாராட்டி வைக்கிறேன். இக்காலந்தாழ்ந்த எம் பாராட்டுதலே எதையும் பொருட்படுத்தாது ஏற்பீராக.

அன்று நினேத்திருப்பாய் போலும்: சீ! சீ!! இந்த இடம் நிரந்தரமுமாகாது! ஆபத்தற்றதுமாகாது! இனி வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்...என்று.

ஆனாலும் இந்த இடம் பூர்வீகமாய் அமைந்த இடம். இதை விடவும் கூடாது. வேறு இடங்கள் பல நாம் தங்கி வாழ்வதற்குப் பரவலாக இங்கொன்றும் அங்கொன்றும் எங்கொன்றுமாவது எப்படியும் தேடியே தீரவேண்டுமென்று திட்டம் தீட்டினுய். பணம்!.........தடவு பலர் தலேகளேயும்! அவர்கள் மூளே மங்கு மட்டும் தடவு தடவு என்று தடவினுய். மதியிழந்தார்கள். அதுதான் தருணம் என்று மதபோதையையும் அவர்களுக்கு ஊட்டுவித்தாய். ஆடினுர்கள். அவ்வாட்டத்தைக் கண்டு மெச்சுவதாக காட்டிக்கொள்ள அவர்களுக்கு 'ஆஸ்திக சிகாமணிகள்' என்ற பட்டங் கட்டினுய், பட்டமேற்ற மகிழ்ச்சியில் ஆடினுர்கள். ஆடினுர்கள். கொஞ்சாஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிற பகுத்தறிவும் சிதறி பறந்தோடும் மட்டும் ஆடித் தீர்த்தார்கள்.

நல்ல புடம் போட்ட மௌடீகர்களாக அவர்கள் காட்சி யளித்ததை: ஐயனே! நாங்கள் உமக்காகச் செய்ய வேண்டுவன எவையாகிலும் உள்ளனவோ கூறுங்கள்—உடல், பொருள், ஆவி அத்தனையையும் உமக்கே அர்ப்பணிக்கச் சித்தமாய் உள்ளோம்—என்று உளறியதனின்று சூசகமாக உணர்ந்து, சாதகமாக்கிக் கொள்ளப் புகுந்தாய். உங்கள் உடலேயும், ஆவியையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். பொருளே மட்டும் கொட்டித் தாருங்கள். நீங்கள் அப்பொருளிழப்பால் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லே. எனக்கு வேண்டுவது நான் ஒருவன் மட்டும் தங்கி வாழ பலப்பலவிடங்களில் பலப்பல வீடுகள் வேண்டும். அதை நீங்கள் வீடு என்று அழைத்துக் கேவலப்படுத்தக் கூடாது. கோயில் என்று அழையுங்கள். அதோடு எனக்கு எப்போதுமே பசி என்பது கிடையவே கிடையாது. இதைச் சொன்னுல் நீங்கள் நம்பவா போகிறீர்கள்! உங்கள் மௌடீகத்தை மெச்சி நான்தான் 'ஆஸ்திகசிகாமணிகள்' என்று அப்பவே பட்டங் கட்டிவிட்டேனே! பார்த்தீரா பார்த்தீரா சும்மா சொல்கிறீர்கள் என்று கூறி எனக்கு படையல மேல் படையல் படைக்கப் போகிறீர். என் உடம்பு கல்லு, இரும்பு—பசி அண்டாது என்று நான் ஊதும் சங்கு உங்கள் செவிட்டுக் காதில் எங்கே விழப்போகிறது. சரி எனக்கு நேரே கொடுக்கும் எப்படையலேயும் நான் கைநீட்டி வாங்கப் போவதில்லே. என் சார்பாக எல்லாவற்றையும் என் இருப்பிடத்தைக் கழுவி, ஒப்புரவு செய்து பேய் பிசாசு அண்டா வண்ணம் மணி அடித்துப் பணி செய்து கிடப்பவனுக்கு கொடுங்கள். அவன் கொழுக்கக் கொழுக்கத்தான் நான் பத்திரமாக இருக்க முடியும்...என்றவாறெல்லாம் பேசித் தீர்த்து மயக்கச் செய்தாய் உமது திருக்கூட்டத்தாரை.

உடனே அவர்களது திருப்பணி ஆரம்பமாய் விட்டது.

ஹரித்துவாரத்தில் ஒரு கோயில், இரண்டு இலட்ச ரூபாயிற்கும் மேலான செலவில், எடுத்தே விட்டார்கள்.

சபரிமலேயிலிருந்து ஹரித்துவாரத்திற்கு புதுமனே புகுவிழா கொண்டாட ரயில் பிரயாணம் பண்ணப் புறப்பட்டாய், வழி நெடுக வரவேற்பு, ஊர்வலம், வாண வேடிக்கை! சென்னே திருவல்லிக்கேணியில் விருந்து—உமக்கல்ல—நீவிர்தான் கூறிவிட்டீரே பேய் பிசாசு அண்டாது மணியோசை எழுப்பும் பிறவிகளுக்கென்று—உபசாரங் கண்டாய், அங்கிருந்து 'கிராண்டிரங்க் எக்ஸ்பிரஸ்'ப் பிடித்து டில்லி—அங்கே நாதஸ்வரக் கச்சேரி பிரமாதம்—அதைவிட்டு ஹரித்துவாரம்! புதுமனே புகுந்தே விட்டாய்!

சென்னேயிலேயும் உமக்கு கோயில் கட்ட இருக்கிருர்கள்!

அதோடு பம்பாய் என்ன சோடையா! அதுவும் கட்டுகிறேன் என்று துடிக்கிறது. இவை யெல்லாம் கட்டி முடிந்ததும் நானே தெரிவிக்கிறேன். அதுவரை அங்கேயே இருப்பீராக! வணக்கம்!

ஐயரின் அறிவுரை!

"ஆரிய—திராவிட சர்ச்சைகளில் சிக்குண்டு திசைகெட்டுப் போகாதீர்கள். சர்ச்சைகளேக் கிளப்புகிறவர்களே வெறுத்துத் தள்ளுங்கள். கண்டியுங்கள்" என்றெல்லாம் அறிவுரை நிகழ்த்தினுர் நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர்! சென்னே விக்டோரியா மாணவர் இல்லத்தில் அய்யர் அவர்கள் உதிர்த்த மணிக்கதிர்கள் இவைகள். வரவேற்கிறேரும்! ஆனுல்!

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்ற வள்ளுவர் வாக்கிற்கு நேர்மாருக பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவன் நான். காலில் பிறந்தவன் நீ என்றும். நான் எல்லார்க்கும் உயர்ந்தவன். வேதம் ஓதுவேன், ஓதுவிப்பேன், இடையில் நீதிபதி வேலே அகப்பட்டாலும் விடமாட்டேன். அது வேறு சங்கதி! ஆனுல் நீ நீசன்! பறையன்! தொடக்கூடாதவன்! நீ என்றென்றும் அடிமையாகவேயிருக்க வேண்டும். தோட்டிவேலே செய். மலமெடு! அதே கையால் உணவருந்து. நீ உழைக்க வேண்டும். நான் கொழுக்க வேண்டும். நீ தாழ வேண்டும். நான் உயர வேண்டும். எனது பூணூலேப் பார்! ஆசாரக் குடுமியைப் பார்! என்ன அகம்பாவம்! எனது எதிரில்!...கழற்றிக் கையிலெடு அந்த உனது செருப்பை! உனது காற்று கூட என்மீது வீசப்படாது. வரும்போது குரல் கொடுத்துக்கொண்டு வா! நான் நீராடும் குளத்தை எட்டிக்கூடப் பார்க்காதே. நான் நீரெடுக்கும் கிணற்றில் நீ கயிறு விடாதே. நான் கை வீசிக் காட்டுவேன். நீ கை கட்டி வளேந்து வாய்பொத்தி பணிசெய். நான் மச்சிமேல் நின்று உச்சுக்குடுமி தட்டிக் காட்டுவேன். நீ பொத்தல் குடிசையில் கூழுக்குமில்லாது சாவு, நான் வாழப் பிறந்தவன், நீ சாகப் பிறந்தவன். இங்கே குறுக்கிடாதே! கடகச் செல் என்று கொக்கரித்தவன் ஆரியனு அன்று திராவிடனு!

திராவிடன் வீரநடை போடட்டும்

அன்புமிக்க, ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். திராவிடன் ஒன்பதாவது ஆண்டு துவக்க மலரினேப் படித்து பெரிதும் மகிழ்வுற்றேன். 'புறப்படுவோம் பஞ்சாப்' கட்டுரை படிப்பதற்கும் வடவரை அறிவதற்கும் மிகவும் உற்சாகமளிக்கிறது, அவர் ஒரு மாதிரி சோஷலிஸ்டு; மனதிற்குள்ளே" சிரியுங்கள் கம்யூனிஸ்ட்டுகளுக்கு உள்ள மமதையைப் போக்கி மதியை அளிக்கும் கட்டுரையாகும், கிரேக்க இலக்கியத்தை பெரிதும் வரவேற்கிறேன் இனி வரும்நாட்களில் திராவிடன் இதழ் மேலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டு பத்திரிகை உலகிலே வீரநடை போடட்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

சி. ஆர். ஏ. இளம்பிறை,

திருப்பத்தூர் (வ. ஆ.)

சைகிளில் குடும்பச் சவாரி!

தில்லிக்குப் போயிருப்பீர்கள், தில்லிச் சாலேகளில் வகை தொகையின்றி, எவ்வித வரம்புக்கும் உட்படாது, எண்ணற்ற சைகிள் கூட்டங்கள் ஓடுவதையுங் கண்டிருப்பீர்கள். உலகிலேயே தில்லியில் தான் சைகிள் கூட்டம் அதிகம் என்ருலும் தவருகாது!

சைகிளில் 'பிரேக்'!...அது எதற்கு! அது இருந்தால் எங்கேயும் நிறுத்தாமல், மனுேவேகம் வாயுவேகமாகப் பறந்து செல்லத்தான் முடியுமா! வேகத்திற்கு 'பிரேக்' முட்டுக்கட்டை யல்லவா!

'பெல்'! அது ஒரு பெரிய தலேவலி! அதன்ஓசை காதையே செவிடாக்கி விடுகிறது! நடந்து செல்லும் வழிப்போக்கர்களும், அதன் ஓசை கேட்டு மிரண்டு சைகிளிலேயே அகப்பட்டுக் கொள்கிருர்கள்! எனவே அனுவசியத் தேவைகளில் 'பெல்'தான் முதன்மையானது! அது வேண்டவே வேண்டாம்!

'லேட்டு'! பட்டம் பகலாட்டும் இரவில் மின்சார விளக்கு பிரகாசிக்கும்போது 'லேட்டு' ஒரு கேடா! தேவையில்லே!

அதற்கப்புறம் 'ஹேண்டிலு'ம் வேண்டாம்! ஏன்! சக்கரங்களும் வேண்டாம்! என்று தில்லி சைகிள் வாலாக்கள் கூறிவிட்டாலும் அதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லே!

அவ்வளவு அழகாக தில்லியில் சைகிள் போக்குவரத்து நடைபெறுகிறது!

அப்படிப்பட்ட சைகிளில் ஏதோ திறமைசாலி ஒருவன் மட்டுமா ஏறி ஓட்டுகிருன்! முன்னுடி 'பிரேமி'ல் தன் மனேவி! அதற்கு முன் 'ஹேண்டில் பார்' அருகே தனது குழந்தை கூடையில்! பின்னுல் தனது சடாப் பெண்! ஆகக் குறைந்தது நான்கு பேர் கொண்ட குடும்பத்துடன்தான் அங்கே சைகிள் சவாரி! ஏனென்று கேட்க ஆளிருந்தாலும் அதிகாரம் இல்லே! இது பல காலமாக நடந்துவரும் சம்பவம்! இதுவரை நிகழ்ந்த விபத்துகள் கணக்கிலடங்கா! ஆபத்து அனந்தம்!

ஆனுல் இப்போதுதான் அக்கண்மூடி முறையை ஒழித்து, சென்னேயைப் போன்று, தடைவிதிக்க தில்லி அரசாங்கம் முற்படுகிறது.

பல்கலேக் கழக வேந்தர் மாணவர் ஆகிருர்!

யுவராஜ கரான் சிங், ஜம்மு-காஷ்மீர் ஜனுதிபதி ஆவார், அவர் காஷ்மீர் சர்வகலாசாலேயின் வேந்தர் (Chancellor) பதவியையும் வகித்து வருகிருர். அவர்தான் அப்பல்கலேக் கழகத்தினின்று படித்து தேறியவர்களுக்கு பட்டம் வழங்குபவராகவும் இருக்கிருர்.

கற்றுத் தேர்ந்த மாணவர்களுக்குப் பெரிய பெரிய பட்டங்களே எல்லாம் நாம் வழங்குகிறேமே அதேநேரத்தில் நாம் எப்பட்டமும் இல்லாது இருக்கிறேமே என்று அவர் நினேத்தார் போலும்!

தீர்மானித்தார்! எப்படியும் வருகிற 1957-ம் ஆண்டில் எம். ஏ. பட்டம் வாங்கி விடவேண்டுமென்றுத் துணிந்தார்!

டில்லி சர்வகலாசாலேயில் தாமும் ஒரு மாணவராகச் சேர்ந்துவிட்டார். அரசியல் ஞான நுணுக்கப் பாடத்தைத் தேர்ந்தெடுத்து படித்து வருகிருர்.

1957-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் இறுதித் தேர்வுக்கு ஆஜராகி வெற்றிபெற்று எம். ஏ. பட்டம் முதல்தர அந்தஸ்தோடு வாங்கி மகிழ்வாராக என்று வாழ்த்திவைப்போம்.

பல்கலேக்கழக வேந்தர் மாணவராகும் விந்தை நம் இந்தியாவிற்கு ஒரு புதுமையல்லவா?

... அச்சகம், 16, ... தெரு, சென்னை-1.